*இயேசுவே வாரும்*

*ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20*

சகோ காலேப் யோசுவா
Tele : 04630 456157

"ஓரேப்"
திருவைகுண்டம் - 628 601
தூத்துக்குடி மாவட்டம்

# ஸ்திரீ - Woman

1. நான் எனது சுயவேலைவாய்புக்காக மிகச் சிறிய தொழில் ஒன்றை நடத்திவருகிறேன். ஏனென்றால் நான் முற்றிலுமாக விசுவாசிகளை சார்ந்து வாழ விரும்பவில்லை. இதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு கர்த்தர் கொடுத்த ஊழியத்தின் செலவுகளையும் எனது குடும்ப செலவுகளையும் கவனித்து வருகிறேன். ஆனாலும் எனது இக்கட்டான வேளைகளில் ஓரிரு வெளி நாடு மற்றும் சென்னை சகோதர்கள் அவ்வப்போது உதவிகள் செய்தது உண்டு. அதினால் நான் யாருக்கும் அடிமையானதில்லை. இவ்வாறாக கிறிஸ்துவுக்குள் மிக்க நெருக்கங்களையும், பாடுகளையும், நிந்தைகளையும், அவ்வப்போது சந்தித்தாலும், அவைகளை மேற்கொண்டு மிக்க மனரம்மியமாக வாழ்ந்து கொண்டு வரும் வேளையில் கடந்த பிப்ரவரி மாதம் தமிழ்நாடு மின்சார வாரியம் தனது தவறான நடவடிக்கையினால் எனது தொழிலை முடக்கியது. எனது தினசரி வருமானம் நின்றது. சூழன்று கொண்டிருந்த குடும்பச் சக்கரம் ஸ்தம்பித்தது. இதனால் அனேகப் பிரச்சனைகள். எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டேன். பிள்ளைகளின் படிப்பு பாதிக்கப்பட்டது. கடன் பாரம் அதிகரித்தது. மனச்சோர்வு அதிகரித்தது. பலவினம் அடைந்தேன். இந்நிலையிலும் அவ்வப்போது பிரதி மாதம் செய்தித் தொகுப்புகள் பற்பல தலைப்புகளில் எழுதி வெளியிட்டு வந்தேன். அவைகள் பிரயோஜனமாக இருந்தது என பலர் கூறினார்கள். ஆறுதல் அடைந்தேன்.

2. இந்நிலையில் சென்னை சகோதரர்கள் மட்டும் என் குடும்ப பராமரிப்புக்கு அவ்வப்போது உதவிகள் செய்தனர். கர்த்தருடைய கிருபையினால் அதிக பாதிப்பு எதுவும் இல்லாமல் குடும்பத்தை நடத்தினேன். பாடுகள் மத்தியிலும் கர்த்தருடைய கிருபையின் கரம் என்மேல் இருந்ததால், சகோதரர்களின் உதவிகள் குடும்பத்தில் ஆறுதலைக் கொண்டுவந்தது. பிரியமானவர்களே இந்த கஷ்டநேரத்தில் எங்களைத் தாங்கிய உங்களது கைகளின் பிரயாசங்களை கர்த்தர் அபரிதமாக ஆசீர்வதிப்பாராக. நீங்கள் உங்கள் பலனை அடையாமற்போவதில்லை. உங்கள் அனைவருக்கும் நானும் என் குடும்பத்தினரும் எங்கள் நன்றியை கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் தெரிவித்துக்கொள்கிறோம். வெளி நாடுகளில் இருந்து வரும் சகோதரர்களுடைய அன்பையும், ஆதரவையும் பெற நாம் அவர்களுடைய உபதேசங்களுக்கும், கொள்கைகளுக்கும் இசைந்து செல்ல நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறோம். நான் எப்பொழுதுமே சுயாதீனனாகவே இருக்க விரும்புகிறேன். ஆதலால் எனக்கும் வெளி நாடுகளில் இருந்து வரும் சகோதரர்களுக்கும் ஒருமனப்பாடு கிடைப்பதில்லை. இது இன்று நேற்று அல்ல. எனது ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் இருந்தே.

3. சென்னை, அட்வகேட் திரு. பால் வசந்தகுமார் அவர்கள் கண்களில் தயவு கிடைத்தது. ஆதலால் சென்னை உயர்நீதிமன்றத்தில் இரு ரிட் மனுக்கள் தாக்கல் செய்தேன். இடைக்கால உத்தரவு சாதகமாக கிடைத்தது. முடக்கப்பட்ட தொழில் மீண்டும் ஜுலை மாதம் முதல் தொடங்கப்பட்டது. ஐந்து மாத காலமாக தொழில் மூடப்பட்டு கிடந்ததாலும்; திருவைகுண்டம் பகுதிகளில் வறட்சிநிலை காணப்படுவதாலும் எனது தெழில் மிகவும் பாதிக்கப்பட்டநிலையில் உள்ளது. ஆதலால் தினசரி தேவைகளுக்கு தக்க வருமானம் இல்லை. ஊழியம் மற்றும் குடும்பதேவைகளுக்கு தக்க வருமானம் எனது கைகளின் பிரயாசங்கள் மூலம் கிடைக்க, சில கடன் பிரச்சனைகள் தீர உங்கள் ஜெபங்களில் என் ஊழியத்தையும், குடும்பத்தையும் நினைத்து கொள்ளுங்கள். B.E. (ECE) படித்துள்ள எனது மூத்த மகனுக்கு தகுந்த வேலை கிடைக்க ஜெபியுங்கள். அவனுக்கு வேலை கிடைக்கும் பட்சத்தில் எனது பாரம் கொஞ்சம் குறையும்.

4. இந்நிலையில் சென்னை, ஆவடி சபை விசுவாசி சகோதரி பியூலா பானுமதி தான் ஸ்திரீகள் காரியத்தில் தேவனுடைய வார்த்தையின்படியும், இக்காலத்துக்குரிய செய்தியின்படியும் தன்னை காத்துக்கொள்ள விரும்புவதாகவும், ஆதலால் ஸ்திரீகளுக்கு அடுத்த அநேக காரியங்களை எழுதி அதற்கு தக்க பதிலை தேவனுடைய வார்த்தையின்படியும் இக்காலத்திற்குரிய செய்தியின்படியும் தெளிவுபடுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்கள். தன்னால் இயன்றவரை தேவனுக்கு முன்பாக நேர்மையாக நடக்க வேண்டும் என்ற இவர்களது வாஞ்சையே இந்தச் செய்தி தொகுப்புக்குத் தூண்டுகோல் ஆகும்.

.5. நமக்குள் நிலைநிற்கிறதும் என்றென்றைக்கும் நம்மோடிருப்பதுமாகிய சத்தியத்தின் நிமித்தம் நான் சத்தியத்தின்படி நேசிக்கிறவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களுமாகிய இக்காலத்துக்குரிய செய்தி, அதாவது 1 தெச. 4:16 **ஆரவாரம்** சத்தத்தைக் கேட்டு மத். 25:6–ன்படி தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தும் நம்முடைய விலையேறப்பெற்ற சகோதரிகளுக்கு பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும், இரக்கமும், சமாதானமும் சத்தியத்தோடும் அன்போடுங் கூட உங்கள் அனைவரோடும் கர்த்தருடைய வருகையின் பரியந்தம் நிலைத்திருப்பதாக.

6. ஆண் பெண் சமத்துவம், பெண்களின் சுதந்திரம், பெண்களுக்கான இட ஒதுக்கீடு என கோஷம் எழுப்பப்பட்டுவரும் இந்நாட்களில் கிறிஸ்துவுக்குள்ளான சகோதரிகளே, ஸ்திரீகளுக்கு அடுத்த காரியங்களை

குறித்து நான் உங்களுக்கு புதிதாக எதுவும் எழுதாமல் வேத வாக்கியங்களில் ஆதி முதல் உள்ளவைகளை நீங்கள் கேட்டு அறிந்திருக்கிறபடியும் இக்காலத்துக்குரிய செய்தியின்படியும் உங்களுக்கு பிரயோஜனமான போதனைகளை, உபதேசங்களை தொகுத்தெழுதி, நீங்கள் அவைகளின்படி நடந்து கனி கொடுக்க வேண்டும் என்று கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காக கர்த்தரால் சுவிஷேசகனாக எற்படுத்தப்பட்டவனாகிய நான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

7. தேவன் ஒரு ஆவி. யோ. 4:24. (God is a Spirit) இது நித்தியஆவி. எபி. 9:14. நித்தியத்திற்கு தொடக்கமும் முடிவும் கிடையாது. எதுவும் சிருஷ்டிக்கப்படுமுன், எதுவும் உருவாக்கப்படுமுன், எதுவும் தோன்றுமுன் இந்த நித்தியஆவி, தேவன் என்று அறியப்படவில்லை. தேவன் என்பதற்கு ஆராதனைக்குரியவர் என்று பொருள். இந்த நித்தியஆவியை தேவனாக தொழுதுகொள்ள, அவரை ஆராதிக்க எந்த விதமான சிருஷ்டியும் இல்லை. அவருக்கென்று எந்தவிதமான சாயலும் ரூபமும் கிடையாது. ஆதலால் இந்த நித்தியஆவி, தான் தேவன் என்று அறியப்படும் பொருட்டு எதுவும் சிருஷ்டிக்கப்படும் முன்பு, தான் சிருஷ்டிக்கப் போகும் தனது சிருஷ்டிகள் தன்னை தேவனாக தொழுதுகொள்ள, ஆராதிக்க தனக்கென்று ஒரு ஆவிக்குரிய சரீரத்தை உடையவரானார். அதாவது நித்தியஆவி தன்னைத்தானே ஒரு ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டித்து தன்னில்தானே ஜீவன் உள்ளவரானார். இந்த ஆவிக்குரிய சரீரம் **வார்த்தை** (Logos) ஆகும். அந்த வேளை **ஆதி** என்று அழைக்கப்பட்டது. **ஆதி**யிலே **வார்த்தை** இருந்தது. அந்த **வார்த்தை** தேவனாயிருந்தது. யோ. 1:1. **வார்த்தை** ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. யோ. 6:63.

8. நித்தியத்தில் தேவன் மாத்திரமே இருந்தார். இவர் நித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதி. 1 தீமோ. 6:15. இவரைத் தவிர வேறொருவரும் இல்லை. ஏசா.43:10,45:18,46:9. இவர் ஆதி முதல் அந்தம் வரை தான் நடப்பிக்கப்போகிற தம்முடைய செய்கைகள் அனைத்தையும் தம்முடைய சிந்தையில் எண்ணங்களாக கொண்டிருந்தார். அவர் தம்முடைய சிந்தையில் இருந்த எண்ணங்கள் அனைத்தையும் வெளிப்படுத்தி பேசின போது அந்த எண்ணங்கள் **வார்த்தை** ஆனது.

9. நித்தியஆவி தனக்கென்று ஒரு ஆவிக்குரிய சரீரத்தை உடையவராகி தன்னில்தானே ஜீவன் உள்ளவரானதால் **யேகோவா** என்று அழைக்கப்பட்டார். **யேகோவா** என்பதற்கு தன்னில்தானே ஜீவனுள்ளவர் என்று பொருள். **யேகோவா** என்ற வார்த்தை தமிழிலில் **கர்த்தர்** என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

10. மேலும் இந்த ஆவிக்குரிய சரீரத்தில் தேவன் சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமாகி **தேவகுமாரன்** (Son of God) என்று அழைக்கப்பட்டார். நித்தியஆவி, தேவகுமாரனில் தொழுகைக்குரியவரானார், ஆராதனைக்குரியவரானார். எபி. 1:6. தேவத்துவத்தில் **பிதா** (நித்தியஆவி) **குமாரன்** (வார்த்தை) தன்மைகள் வெளிப்பட்டது. இயேசு: நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும் என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறி போகிறேன் என்றார். யோ. 20:17. அதாவது அவர் தம்முடைய மாம்ச சரீரத்தில் இருந்து தன் ஆவிக்குரிய சரீரத்துக்கு செல்வதை இவ்வாறாக கூறிப்பிடுகிறார். ஆதலால் தான் குமாரனை குறித்து யோவான் இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாய் இருக்கிறார் என்று அறிக்கையிட்டான். 1 யோ. 5:20.

11. பிதாவையும் குமாரனையும் வேறுபடுத்தி பிதா ஒருவர், குமாரன் ஒருவர் என்று அறிக்கையிடுகிறவன். அந்திக்கிறிஸ்து. 1 யோ. 2:22. பாருங்கள் குமாரனை அறிக்கையிடுகிறவன் பிதாவையுடையவனாயிருக்கிறான். 1 யோ. 2:23 **குமாரன்** யார்? **வார்த்தை...** (Logos) **.வார்த்தை** யார்? **நித்தியஆவி. நித்தியஆவி** யார்?. **பிதாவாகிய தேவன்.** ஆக தேவத்துவத்தை நீங்கள் மூன்று கூறுபோட்டு பிரிக்கமுடியாது. ஆதலால் திரித்துவ உபதேசம் முற்றிலுமாக ஒரு மாறுபாடான உபதேசம்.

12. தேவன் தம்மை ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்துகிறார். கல்விமான்கள் தங்கள் கல்வி அறிவினால், அந்த அறிவினால் பெற்ற பற்பல பட்டங்களினால், அந்த பட்டங்களினால் பெற்ற பதவிகளினால் தேவத்துவத்தை அறிந்து , புரிந்து கொள்ள முடியாது. ஏன் என்றால் பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான், குமாரனும், குமாரன் எவனுக்கு அவனை வெளிப்படுத்த சித்தமாயிருக்கிறாரோ, அவனும் தவிர வேறொருவனும் பிதாவை அறியான். மத். 11:25,27. பிதா குமாரனை பேதுருவுக்கும் மத். 11:17, குமாரன் பிதாவை பிலிப்புக்கும் யோ. 14:12 வெளிப்படுத்தினார். பிதா குமாரனையும், குமாரன் பிதாவையும் வேதபண்டிதர்களுக்கும், டாக்டர்களுக்கும், கல்விமான்களுக்கும் வெளிப்படுத்தவில்லை. இதனால்தான் Rev. Dr. தியோடர் வில்லியம்ஸ், பொறியாளர் சகோ. R. ஸ்டேன்லி, Dr. புஷ்பராஜ் போன்றவர்கள் இந்த பரம சிலாக்கியத்தை இழந்து விட்டனர்.

13. மூன்று ஆட்கள் கொண்ட தேவத்துவத்தை இவர்கள் போதிக்கிறார்கள். ஒரு ஆள் இல்லாமல் ஒரு மனித உருவம் இருக்கமுடியாது. ஒரு மனித உருவம் உண்டாவதுதற்கு ஒரு நபர் இருக்க வேண்டும். ஆக மூன்று ஆட்கள் என்றால் மூன்று நபர்கள், அதாவது மூன்று மனிதர்கள். அங்கு ஒரே தேவன் என்பதற்கு இடமே இல்லை. ஒரே தேவன் என்றால் அவர் ஒரே நபர் தான், ஒரே மனிதர் தான். ஆம் பிரியமானவர்களே **வெளிப்பாடு இல்லாமல் ஒருவனும் தேவனை அறிந்துகொள்ள முடியாது.** பிதா குமாரன் பரிசுத்தாவி மூன்று தேவர்கள் அல்ல, ஒரே தேவனின் மூன்று நடபடிகள். ஒரு இஸ்ரவேலனிடம் சென்று மூன்று தேவர்களைப் பற்றிக் கூறினால் அவன் இவர்களை விரட்டியடிப்பான்.

14. **வார்த்தை** நம்மைப்போன்ற மானிட சாயலையும், ரூபத்தையும் உடைய ஆவிக்குரிய சரீரம் யாத். 33:23,. இந்த சரீரத்துக்கு மாம்சமும் இரத்தமும் கிடையாது. ஏன்னென்றால் மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை 1 கொரி. 15:50. இந்த ஆவிக்குரிய சரீரத்தை **தியாபனி சரீரம்** (Theophany

body) என்று அழைக்கிறோம்.

15. காலம் நிறைவேறினபோது (கலா.4:5) **வார்த்தை** தன் ஆவிக்குரிய, தியாபனி சரீரத்தில் இருந்து மாமிச சரீரத்தில் (யோ.1:16.) ஸ்திரீயினிடத்தில் பிறந்து (கலா.4:5) நம் மத்தியில் வாசம் செய்தார் (யோ.1:10, 1தீமோ.3:16.) தேவன் தன் ஆவிக்குரிய சரீரத்தில் இருந்து மாம்சசரீரத்துக்கு வந்து நம்முடைய மீறுதல்களுக்காவும் அக்கிரமங்களுக்காவும் பாடுபட்டு ,மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தார். 1கொரி. 15:3&4. மறுபடியும் தன் ஆவிக்குரிய சரீரத்துக்குச் சென்றார். லூக்.24:51.

16. இவருடைய மணவாட்டி யாதொன்றும் சிருஷ்டிக்கப்படுமுன்பே, உருவாக்கப்பட்டு படைக்கப்படு முன்பே அவருக்குள், அவரோடு, அவருடைய சிந்தையில் இருந்தாள். பின் அவருடன் **வார்த்தை**யானாள். காலம் நிறைவேறினபோது ஒரு ஸ்திரீயின் வயிற்றில் உருவாகிப் பிறந்தாள். ஒரு நபர் தேவனுடைய சிந்தையில் எண்ணமாக இருந்தாதொளிய **வார்த்தை** ஆக முடியாது. மணவாட்டி உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் தெரிந்து கொள்ளப்பட்டவள் எபே.1:4. இவள் தேவனால் முன்னறிந்து முன்குறிக்கப்பட்டு, அழைக்கப்பட்டு, நீதிமானாக்கப்பட்டு, மகிமைப்படுத்தப்பட்டவள், ரோ.8:29&30.

17. தேவன் தம்முடைய சாயலாகவும், ரூபத்தின் படியும் மனுஷனை சிருஷ்டித்தார். ஆதி. 1:27. அதாவது **வார்த்தை**யின், தியாபனி சரீரத்தின், ஆவிக்குரிய சரீரத்தின் சாயலாகவும், ரூபத்தின்படியையும் மனுஷனை சிருஷ்டித்தார். இந்த தேவனுடைய சரீரம் நமது ஜென்மசரீரத்துக்கு ஒப்பாகவே இருந்தது. ஏன்னென்றால் மோசே, நமது சாயலுக்கு ஒத்த அவரது பின் பாகத்தைக் கண்டான். யாக்.33:1–28. ஆக தேவனுடைய ஆவிக்குரிய சரீரம் நமது சரீரஅமைப்புக்கு ஒத்ததாகவே இருந்தது. ஏன்னென்றால் அவரது சாயலின் படியேயும் ரூபத்தின் படியேயும் நாம் சிருஷ்டிக்கப்பட்டோம்.

18. தேவன் மனுஷனை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். ஆதி. 1:27. எவ்வாறு தேவனுடைய ஆவிக்குரிய சரீரத்துக்குள் அவருடைய மணவாட்டி அவருடன் இருந்தாளோ, அதே போன்று மனுஷனுடைய ஆவிக்குரிய சரீரத்துக்குள் அவனுடன் அவனுக்குள்ளே அவனுடைய மணவாட்டி இருந்தாள். ஆதாமுடன் அவனுடைய மணவாட்டி அவனுக்குள் ஒரே ஆவிக்குரிய சரீரத்தில் இருந்தாள். ஆணும் பெண்ணுமாக சேர்ந்தது தான் மனுஷன். இதிலிருந்து மனுஷன் தன்னில்தானே நிறைவு பெற்றவன் அல்ல, அவன் நிறைவு பெற ஒரு பெண் தேவை என நாம் காண்கிறோம். ஆதி. 2:18 இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும், தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள் ஆதி. 2:24.

19. இதன் பின், தேவன் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியில் ஊத அவன் ஜீவாத்துமா ஆனான். ஆதி. 2:7. ஆவிக்குரிய சரீரத்தில் அதாவது தியாபனி சரீரத்தில் இருந்த மனுஷன் மாம்ச சரீரத்தில் உருவாக்கப்பட்டான். அதாவது மனுஷன் தேவ சாயலாக, ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டிக்கப்பட்டு, பின் மிருகசாயலாக மாம்ச சரீரத்தில் உருவாக்கப்பட்டான். இப்பொழுது மனுஷனுடைய ஆவிக்குரிய சரீரத்தில் இருந்த ஆண் பெண் பாகங்களில் ஆண்பாகம் மட்டும் பிரித்தெடுக்கப்பட்டு அதன் மாம்ச சரீரத்தை பெற்றது.. ஆனால் மற்றொரு பாகமாகிய பெண்பாகம் இன்னும் ஆவிக்குரிய சரீரத்திலே அவனுக்குள் இருந்தது.

20. சிலர் தீர்க்கதரிசியின் இந்த போதனையை தவறாக புரிந்து கொண்டு, நம்மில் ஒரு பகுதி ஆவிக்குரிய சரீரத்திலும், மற்றோரு பகுதி மாம்ச சரீரத்திலும் ஒரே நேரத்தில் இருக்கிறது என ஒரு தவறான போதனைக் கொண்டு வந்து, இக்காலத்துக்குரியச் செய்தியை தாறுமாறாக்குகிறார்கள். (கே.ப.74, பத்திகள் 827–830).

21. தற்போது நாம் மாமிச சரீரத்தில் தான் இருக்கிறோம். ஆனால் இன்னோரு சரீரம் நமக்காக காத்துக்கொண்டிருக்கிறது. இது தான் உண்மை. 2 கொரி. 5:1. ஆவிக்குரிய சரீரத்தில் நாம் இப்பொழுது இல்லை. ஆனால் அது நமக்காக காத்துக் கொண்டிருக்கிறது. நாம் இந்தசரீரத்தை விட்டு பிரியும்போதுதான் அந்தசரீரத்தை பெற்றுக்கொள்ள முடியும். இந்த சரீரத்தில் இருந்து கொண்டே அந்த சரிரத்திலும் இருக்க முடியாது. அதாவது மாம்ச சரீரத்திலும் ஆவிக்குரிய சரீரத்திலும் நாம் ஒரே நேரத்தில் இருக்க முடியாது. ஒரே சமயத்தில் நாம் இரு வித்தியாசமான சரீரத்தில் இருக்க முடியாது. இது தான் சத்தியம்.

22. ஆதலால் பிரியமானவர்களே, இக்காலத்திற்குரிய தீர்க்கதரிசி தன் மாம்ச சரீரத்தில் இருந்து கொண்டு சூரிய அஸ்தமன மலை சிகரத்தில் தன் ஆவிக்குரிய சரீரத்தை (தியாபினி சரீரம்) கண்டார். என்ற உபதேசம் தவறானது. இது குறித்து நீங்கள் தெளிவுபெற கே.ப 381 ல் பத்தி 58 யை தியானியுங்கள். இங்கு ஆங்கிலத்தில் இவ்வாறாக உள்ளது You can't be in two bodies at one time, but there can be two natures in you at one time. இதை தமிழில் மொழி பெயர்த்த WBGNS இவ்வாறாக மொழி பெயர்த்துள்ளார்கள் **ஆனால் நீங்கள் ஒரே சமயத்தில் இரண்டு சரீரங்களில் இருக்க முடியாது** என முடித்து விட்டார்கள். அதாவது இது ஒரு அரை குறை மொழி பெயர்ப்பு. But there can be two natures in you at one time என்பது மொழி பெயர்த்து எழுதப்படவில்லை. அதாவது நீங்கள் ஒரே சமயத்தில் இரண்டு சுபாவத்தை கொண்டவர்களாக இருக்க முடியும் என்பதை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்க மறந்து விட்டார்கள். ஏனென்றால் செய்தியை கூட்டுவதும், குறைப்பதும், தவறாக மொழி பெயர்ப்பதும்தானே இவர்களது பணி. இவ்வாறாக தங்கள் பணியை திறம்பட செய்து வரும் சகோ. அந்தோணி அப்பாவும், சகோ. மோசஸ் தயானந்தமும் பாராட்டுதலுக்குரியவர்களே.

23. பிரியமானவர்களே நான் ஆதி முதல் எழுதி வருகிற படி WBGNS தமிழ் மொழி பெயர்ப்புகளை நம்பி மோசம் போகாதீர்கள். இது தீர்க்கதரிசியின் பெயரை கொண்டுள்ள உலகப்பிரகானமாக ஒரு ஸ்தாபனம்.

இதில் இப்பிரஞ்சத்தில் உள்ள அனைத்து தில்லுமுல்லுகளும், வஞ்சனைகளும், சூது.களும், சுருக்கமாக சொல்லப்போனால் இது பேய்களுடைய குடியிருப்பும் சகல வித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும், அசுத்தமும் அருவருப்பும் உள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று. இதன் இந்நிலைக்கு காரணம் சகோ. அந்தோணி அப்பாவும் சகோ. மோசஸ் தயானந்தம் ஆகும். இவர்கள் இருவரும் சேர்ந்து WBGNS என்ற கட்சிப் பெயரில் அரசியல் நடத்தி வருகிறார்கள். இந்த கட்சியில் சென்னை, பட்டாபிராம் சகோ. எட்வர்ட், பெங்களூர் சகோ. அலோஷியஸ் தாமஸ் போன்ற சில தலைவர்களும் உண்டு.

24. நமது மத்தியில் இக்காலத்துக்குரிய செய்தியில் ஊழியர்காரர்கள் என கூறிக்கொண்டு கள்ள, கபடமுள்ள வேலையாட்கள் பலர் தங்கள் சுய ஆதாயத்துக்காக வெளிநாடுகளில் இருந்து வரும் அவர்களது இனத்தினருக்கு வால் பிடித்து கொண்டு, அவர்களுடன் ஊர்கள் பல சுற்றிக்கொண்டு, அவர்கள் கொடுக்கும் உதவிக்காக, அவர்களுடைய உபதேசங்களை முழு மனதுடனோ அல்லது மனதில்லாதோ பணத்திற்காக பின்பற்றி அதை விசுவாசத்தில் குறைவு உள்ளவர்கள் மனதில் புகுத்தி, அவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்வது மட்டும். அல்லாது வலது இடது கைக்கு வித்தியாசம் தெரியாத அனேக விசுவாசிகளை ஏமாற்றுகிறார்கள். தேவனுடைய மந்தையில் சேரா ஆடுகள் இவர்கள் சத்தத்துக்கு செவிக்கொடுக்கின்றன. இவர்கள் தீர்க்கத்தரிசியின் செய்தி, செய்தி, எனக்கூறிக்கொண்டு அதற்குள் தங்கள் சுயகருத்துக்களைப் புகுத்தி மக்களை திசை திருப்புகிறார்கள். இந்நாட்களில் ஒருவனை அவன் பெற்றுள்ள பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தான் அவன் வலது இடது புறம் சாய்ந்து விடாதபடி காத்து அவனை செம்மையான வழியில் வழிநடத்தி செல்ல வேண்டும். எந்தக்காலத்திலும் இல்லாத கொடிதான வஞ்சகம் இந்நாட்களில் நம் மத்தியில் காணப்படுகிறது.

25. இப்பொழுது பாருங்கள், ஆதாம் ஆணும் பெண்ணுமாக ஆவிக்குரிய சரீரத்தில் அதாவது தியாபனி சரீரத்தில் இருந்தான். ஆவிக்குரிய சரீரத்தில் இருந்த ஆண்பாகத்தை தேவன் மாம்ச சரீரத்தில் உருவாக்கினார் அதே வேளையில் அவனுக்குள் இருந்த பெண் பாகம் இன்னும் மாம்ச சரீரத்தில் வெளிப்படாமல் தியாபனி சரீரத்திலே இருந்தது. இதை தான் தீர்க்கதரிசி ஆதாமின் ஒரு பாகம் ஆவிக்குரிய சரீரத்திலும் மற்றொரு பாகம் மாம்ச சரீரத்திலும் இருந்ததாக கூறுகிறார். ஆனால் இதை தவறாகப்புரிந்து, நம்மில் ஒரு பாகம் ஆவிக்குரிய சரீரத்திலும் மற்றொரு பாகம் மாம்ச சரீரத்திலும் இருக்கிறது என்பது ஒரு தவறான உபதேசம். இது சத்தியத்தை தாறுமாறாக்குவதாகும். ஒருவேளை இந்த உபதேசத்தை தீர்க்கதரிசியின் ஊழியத்தை தங்கள் கண்களால் கண்டவர்கள் கொண்டு வந்தால் கூட நாம் அதை நம்பி மோசம் போகக் கூடாது. நாம் எல்லாவற்றையும் ஆராய்ந்து அறிய வேண்டியவர்களாயிருக்கிறோம். தேவன் நாம் வஞ்சிக்கப்படக் கூடாதபடி தெளிந்த புத்தியையும், ஞானத்தையும், பகுத்தறிவையும் தன்மையும் கொடுத்திருக்கிறார். அல்லேலூயா!

26. இப்பொழுது தேவனாகிய கர்த்தர் மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார். ஆதி. 2:18. ஆதலால், கர்த்தர் ஆதாமில் இருந்து அவன் விலா எலும்பு ஒன்றை எடுத்து அதை மனுஷியாக உருவாக்கியபோது ஆதி. 2:22, அவன் சரீரத்தில் இருந்த அந்த ஆவிக்குரிய பெண்பாகம் மாமிச சரீரத்துக்கு கொண்டுவரப்பட்டது. இவ்வாறாக ஆதாமின் தியாபனி சரீரத்தில் இருந்த ஆண் பெண் பாகங்கள் ஒன்றன்பின் ஒன்றாக மாம்ச சரீரத்துக்கு கொண்டுவரப்பட்டது. இவ்வாறாக தேவ சாயலாக மனுஷன் ஆணும் பெண்ணுமாக ஆவிக்குரிய சரீரத்தில் சிருஷ்டிக்கப்பட்டு பின் தனித்தனியே ஆணும் பெண்ணுமாக மாம்ச சரீரத்தில் உருவாக்கப்பட்டு பூரண புருஷனும் ஸ்திரீயுமாக இந்த பூமியில் மனுக்குலத்தில் முதல் பிரஜைகளாக மனுக்குலம் பலுகிப்பெருக கணவனும் மனைவியுமாக இணைக்கப்பட்டனர். ஆதாம் தன் மனைவிக்கு **ஏவாள்** என்று பெயரிட்டான். இவ்வாறாக, ஆதாம் தேவனுடைய கரத்தில் இருந்து தன் மணவாட்டியாகிய ஏவாளை தன் சுயசரீரத்தில் இருந்து ஏதேன் தோட்டத்தில் பெற்று, இருவரும் கணவனும் மனைவியுமாக இல்லரவாழ்க்கையில் இணைக்கப்பட்டு சமஅந்தஸ்து, சமஉரிமை உடையவர்களாய் இந்த பூமியில் ஆளுகை செய்தனர். இயற்கையில் ஏவாள் ஆதாமுடன் சமமாயிருந்தாள். அதாவது மனுஷனுடன் சமமானவளாய் இருந்தாள். எல்லா சிருஷ்டியின் மேலும் மனிதனுக்கு சமமாக ஆளுகை செய்தாள், ஆட்சி செய்தாள்.

27. தேவனுடைய சிருஷ்டிப்பில் மற்ற எல்லா பெண் இனங்களும் மூல சிருஷ்டிப்பில் இருந்தன. ஆனால் பெண் மாத்திரமே மூல சிருஷ்டிப்பில் இல்லை. அது அவ்வாறு இருக்க வேண்டியதாயிருந்தது. சிருஷ்டிப்பின் போது ஏவாள் மூல சிருஷ்பில் இல்லாமல் உப பொருளாக (By Product) இருந்தாள். அவள் பெண் இனமாக தனிப்பட்ட விதத்தில் ஆதியில் உண்டாக்கப்படவில்லை.

28. **கிறிஸ்துவுக்குள் ஒரு மனுஷனுக்கும் ஸ்திரீக்கும் ஏற்படும் இல்லற வாழ்க்கை ஒப்பந்தம் விவாகம் அல்லது திருமணம் ஆகும்.** விவாகம் பண்ணாதே என்பவர்கள் பொய்யர். 1 தீமோ. 4:2–3. மனுஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று கண்ட தேவன் அவனுக்கு ஏற்ற துணையாக ஒரு ஸ்திரீயைக் கொடுத்தார். ஆதி. 2:8. இவர்கள் சுகத்திலும், துக்கத்திலும்; வாழ்விலும், தாழ்விலும் ஒருவரை ஒருவர் ஆதரித்து, நேசித்து, கனப்படுத்தி, இருவரும் உயிரோடிருக்குமளவும் மறு விவாகம் செய்யாமல் ஒருவரில் ஒருவர் பெறவேண்டிய சிநேகத்தையும், அன்பையும், ஆறுதலையும், சகாயத்தையும் அடைய நியமிக்கப்பட்டது. ஆதி. 2:18. ஒருவன் வேசித்தனத்துக்கு விலகி, பாவத்துக்கு தன்னை தப்பித்துக்கொள்ளும்படி விவாகம் செய்து, கிறிஸ்துவின் சரீரத்தில் அசுசிப்படாத அவயவங்களாக தங்களை காத்துக்கொள்ள விவாகம் நியமிக்கப்பட்டது. 1 கொரி. 7:2. தேவனுடைய ராஜ்யத்துக்கு மகிமை உண்டாக பிள்ளைகளைப் பெற்று அவர்களை தேவபக்தியில் வளர்க்க விவாகம் நியமிக்கப்பட்டது. மல். 2:15, 1 தீமோ 3:2–4. ஸ்திரீ ஒரு விருட்சம். அவள் கனிதரும் விருட்சம். நீங்கள் உங்கள் தாயின் கனி. நீங்கள் அவள் கர்ப்பத்தின் கனி.

29. ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்துகொள்ளாமல் இல்லற வாழ்க்கை நடத்தலாம், இது

சமுதாயத்தில் தவறான நடக்கையாய் இருக்கலாம். ஆனால் சட்டத்தின் கீழ் அது சரி என்று நமது நாட்டில் அலாகாபாத் நீதிமன்றத்தில் நீதிபதிகள் திரு. எம். கட்சு (M.Katju) மற்றும் திரு. ஆர்.பி. மிஸ்ரா (R.B. Mishra) மே 27, 2001–ல் தீர்ப்பு கூறினார்கள். திருமணம் செய்துகொள்ளாமல் இல்லறவாழ்க்கை வாழ்வது தேவனுடைய வார்த்தையின்படி தவறு ஆகும். திருமணத்திற்கு முன்மாதிரியாக ஆட்டுக்குட்டியானவரின் கல்யாணமும் கலியாணவிருந்தும் குறித்து நாம் வெளி. 19:9–ல் வாசிக்கிறோம். விவாகம் யாவருக்குள்ளும் கனம் உள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததுமாயிருப்பதாக என வேதம் கூறுகிறது. எபி. 13:4. இது திருமணத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. ஆதலால் திருமணம் இல்லாமல் ஒரு ஆண் பெண் இல்லற வாழ்க்கை நடத்தக்கூடாது. மேலும் பரலோக ராஜ்யம் தன் குமாரனுக்கு கலியாணம் செய்து வைத்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாக இருக்கிறது. மத். 22:12. கானா ஊரிலே நடந்த கலியாணத்திற்கு இயேசு அழைக்கப்பட்டிருந்தார். யோ. 2:2. கலியாண விருந்து குறித்து மத். 22:8., லூக். 12:36, வெளி. 19:9. போன்ற வசனங்களை வாசிக்கிறோம். கலியாண வஸ்திரம் குறித்து மத். 22:12 & 13 வெளி. 19:8, உன். 4:11, ஏரே. 2:32 வசனங்களில் வாசிக்கிறோம். ஆதலால் கிறிஸ்தவர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் இல்லற வாழ்க்கை நடத்தக் கூடாது.

30. **திருமணம் இது கிறிஸ்துவுக்கும் அவருடைய மணவாட்டிக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கவேண்டும். எபே. 5: 22–33. திருமணத்தில் மூன்று கட்டங்கள் உண்டு. அ) மணவாட்டியைத் தெரிந்தெடுத்தல் ஆ). நிச்சயம் செய்தல் (அதாவது உறுதி செய்தல்) இ). திருமண விருந்து.**

அ) **மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல் (Choosing a Bride)**:- கிறிஸ்து தம்முடைய மணவாட்டியை உலகத்தோற்றத்துக்கு முன்னே கற்புள்ள (2 கொரி. 11:2) புத்தியுள்ள (மத் 25:2.) கன்னிகையாக, தம்முடைய முன்னறியும் அறிவைக் கொண்டு தெரிந்து கொள்கிறார். எலியேசர், ஈசாக்குக்கு அழியாத அலங்காரமாயிருக்கிற சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணத்தை அலங்காரமாக கொண்ட ரெபெக்காளை மணவாட்டியாகத் தெரிந்து கொண்டான். ஆதி 22:12,13&14, 1பேது.3:4, ஆனால் மனிதனோ பெண்ணின் அழகுக்கும், படிப்புக்கும், அவள் சம்பாத்தியத்திற்கும், அவள் வீட்டு வரதட்சணைக்கும் முக்கியத்துவம் கொடுத்து மணவாட்டியை தெரிந்து கொள்கிறான்.

ஆ) **நிச்சயம் செய்தல் (Betrothal):-** கிறிஸ்து தம்முடைய மணவாட்டியை பரிசுத்த ஆவியினால் முத்தரித்து, உறுதி செய்கிறார் எபே. 4:30. அதன் பின் அதில் எந்தவித மாற்றமும் கிடையாது. மனுஷனோ தான் பேசிய வரதட்சணை (நகை மற்றும் ரொக்கப்பணம்) நிச்சயத்தினம் பெண் வீட்டாரிடமிருந்து பெற்றுக் கொண்டு திருமணத்தை உறுதி செய்கிறான். தரகன் அன்று தனக்குரிய தரகுப் பணத்தை பெற்றுக் கொள்கிறான். **இந்நாட்களில் ஒரு தரகன் தான் திருமணத்திற்கு ஒரு ஆணையும் பெண்ணையும் சேர்த்து வைக்கிறான். இப்படியிருக்க அந்த திருமணக் காரியம் தரகனால் வந்ததே அன்றி கர்த்தரால் வந்தது இல்லவே இல்லை.** நிச்சயம் செய்துவிட்டால் அது திருமணம் நடந்து விட்டதாகவே கருதப்படும். நிச்சயம் முடிந்தபின் எந்த ஒரு காரணத்தின் நிமித்தமாகவும் திருமணம் தடைபட்டு பின் அவர்கள் மற்றொருவனை, மற்றொருத்தியை திருமணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கை நடத்தினால் அது விபச்சார வாழ்க்கை ஆகும்.

இ). **திருமண விருந்து (Wedding Feast):-** கிறிஸ்துவின் மணவாட்டி அவரது சிங்காசனத்தில் அவருடன் கூட உட்கார்ந்து அவரோடே போஜனம் பண்ணும் விருந்து ஆகும். வெளி. 3:20,21; மத் 26:29. மனுஷனோ சைவ, அசைவ விருந்துடன் தாம்புலத்தட்டில் வெற்றிலை பாக்கு; பீடி சிகிரெட்; பூ வைத்து களியாட்டத்தில் விருந்து கொண்டாடுகிறான். மனுஷன் இத்தனை அட்டுழியத்தையும் செய்து, பின் இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது என கூறி தன்னைத்தானே தேற்றிக் கொள்ளுகிறான், வஞ்சித்துக் கொள்ளுகிறான்.

31. ஆதாமுக்கு ஏற்ற துணையை அவன் சரீரத்திலிருந்து எடுத்து தேவன் அவனிடம் ஒப்புக்கொடுத்தார். ஆதலால் அவனுக்கு தன் மணவாட்டியை தெரிந்து கொள்ள வேண்டிய வாய்ப்பு இல்லாதிருந்தது. ஆனால் நம்முடைய காரியம் அப்படியல்ல. நாம் நம்முடைய ஏற்ற துணையை அதாவது நம்முடைய சரீரத்தின் ஒரு பாகத்தை ஏற்ற வேளையில் கர்த்தர் நமக்கு காண்பித்து கொடுக்க தேவனுடைய பாதத்தில் ஜெபத்திலும் விண்ணப்பத்திலும் தரித்திரிந்து அவருடைய சித்தத்தை அறிந்து நம்முடைய துணையைத் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

32. எந்த ஒரு விசுவாசியும், எக்காரணத்தைக் கொண்டும் ஒரு அவிசுவாசியை திருமணம் செய்யக்கூடாது. விசுவாசிக்கு அவிசுவாசியுடன் பங்கேது? 2கொரி. 6:15. அந்நிய நுகத்திலே அவிசுவாசியுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக. 2 கொரி.6:16. பரிசுத்தவித்தை அந்நிய நுகத்தில் பிணைக்கக்கூடாது. உபா.7:1&3 நெகே.13:23–27. அந்நிய விசுவாசத்தில் நம்பிக்கை உள்ளவர்களிடம் சம்மந்தம் கலந்தால் அவர்கள் அவர்களுடைய விசுவாசத்திற்கு, நம்பிக்கைக்கு நம்முடைய குமாரனை, குமாரத்தியை இழுத்து அவர்களை தங்களுடைய விசுவாசத்தில் இருந்து வழி விலகப்பண்ணுவார்கள். உபா. 7:3&4. அவர்கள் உங்களுக்கு கண்ணியாகவும், வலையாகவும், உங்கள் விலாவுக்கு சவுக்காகவும், கண்களுக்கு முள்ளுமாகவும் இருப்பார்கள் என்று நிச்சியமாய் அறியுங்கள். யோசு. 23:13. இது குறித்து நீங்கள் **தேவனைக் குறித்து நிச்சயமுடையவர்களாக இருங்கள்** என்ற செய்தியில் ஆறாவது பத்தியில் கீழ்கண்டவாறு வாசிக்கலாம். **எந்த ஒரு விசுவாசியும் ஒரு அவிசுவாசியை எக்காரணத்தைக் கொண்டும் விவாகம் செய்துகொள்ளக்கூடாது. எப்போழுதுமே ஒரு விசுவாசியையே மணந்துகொள்ள வேண்டும்.**

33. பெற்றோரின் உடன் பிறந்தார் பிள்ளைகளை (Cousin) திருமணம் செய்யக்கூடாது. அதாவது தகப்பனாரின்

உடன் பிறந்த சகோதரி மகனை அல்லது மகளை, அவ்வாறகவே தாயின் உடன்பிறந்த சகோதரன் மகன் அல்லது மகளை திருமணம் செய்க்கூடாது. ஆனால் ஆதியில் காயின் தன் உடன்பிறந்த சகோதரியை (Own Sister) திருமணம் செய்தான். அன்று அவனுக்கு வேறு வழி எதுவும் கிடையாது. பின் ஈசாக்கு தன் தாயின் உடன் பிறந்த சகோதரன் மகளை ரெபெக்காளை (First Blood Cousin) திருமணம் செய்தான். ஆபிரகாம் தன் தகப்பனுக்கு தன் தாய் அல்லாது மற்றொரு மனைவியிடம் பிறந்த தன் சகோதரியாகிய சாராளை (Blood Sister) திருமணம் செய்தான். ஆனால் இந்நாட்களில் நம் இரத்த சம்பந்த உறவில் முதல், இரண்டாம் உறவுகளை திருமணம் செய்வது நல்லது அல்ல. ஏனென்றால் இவர்களுடைய சந்ததியில் இரத்த ஓட்டம் (Blood Stream) குறைவுபடுகிறது. (Even down to a first and Second Cousin should never be married. See, because the blood stream becoming low and runnig low. (Hebrew. Page 464 Para 585, 586 and 587.).

34. ஒரு விசுவாசிக்கு, ஒரு அவிசுவாசியை விவாகம் செய்து வைத்து பின் அந்த அவிசுவாசியை நாங்கள் விசுவாசியாக மாற்றி விடுவோம், ஒரு ஆத்துமாவை ஆதாயம் செய்து விடுவோம் என்பதெல்லாம் சாத்தானின் வஞ்சகம். ஆனால் தேவனுடைய வார்த்தை என்ன கூறுகிறது ?. ஒரு விசுவாசிக்கு அவிசுவாசியுடன் பங்கேது ?. ஆதலால் ஒரு விசுவாசி அவ்விசுவாசியை திருமணம் செய்தால் அது தேவனால் நியமியக்கப்பட்ட விவாகம் அல்ல. கிறிஸ்துவின் மணவாட்டி ஒரு மறுபிறப்பு அடைந்த, ஆவிக்குரியவள். அவ்வாறாகவே ஒருவனுடைய மணவாட்டி மறுபிறப்பு அடைந்த ஆவிக்குரியவளாக இருக்க வேண்டும்.

35. திருமணம் பெண்ணின் இசைவு பெற்றபின் ஒழுங்கு செய்ப்படவேண்டும். ஆதி. 24:58. பெண்ணை எக்காரணம் கொண்டும் நிர்ப்பந்தப்படுத்தக்கூடாது. அவளுடைய துணையை தெரிந்தெடுப்பது அவளுக்குரிய சுயாதீனம். அதில் அவள் விருப்பு, வெறுப்பு தான் முடிவு.

36. ஒரு பையன், ஒரு பெண்னை விவாகம் செய்து கொள்வதாக நல்விசுவாசத்துடன் வாக்குக்கொடுத்தால் அவன் அந்தப் பெண்ணையே விவாகம் செய்ய கடமைபட்டிருக்கிறான். அந்த வாக்கு, அவன் அவளை விவாகம் செய்துகொண்டதற்கு சமானம். நாட்டின் சட்டத்திட்டம் செய்கிற ஒரே காரியம் என்னவென்றால் நீங்கள் சட்டத்திற்கு புறம்பாக கணவனும் மனைவியுமாக வாழ்வதற்கு பதிலாக நீங்கள் ஒன்றாக வாழ்வதற்கு அது உங்களுக்கு உரிமை பத்திரம் அளிக்கிறது. உங்கள் விவாகப்பொருத்தனை (நிச்சயம் செய்தல்) புனிதமானது. அதுதான் உங்களை விவாகம் செய்து வைக்கிறது. நீங்கள் தேவனுக்கும் ஒரு மனுஷனுக்கும், ஸ்திரீக்கும் மத்தியில் செய்யும் பொருத்தனையே விவாகம் செய்விக்கிறது. நீங்கள் வாக்கு கொடுத்தப்போது உங்களுக்கு திருமணம் ஆகிவிடுகிறது. திருமணம் செய்கிறேன் என வாக்கு கொடுத்தபின் அதிலிருந்து விலகுவது ஒரு ஏமாற்று செய்கை என டெல்லி நீதிமன்றத்தில் The metropolitian Magistrate, Ms kamini Lau சமீபத்தில் தீர்ப்பு அளித்துள்ளார். Breach of promise to marriy is cheating: Court ( Hindu 5 July, 2001)

37. விவாகம் செய்வதாக வாக்கு கொடுத்தபின் வேறொருத்தியை விவாகம் செய்தால் நீ விபச்சார வாழ்க்கை வாழ்வதாகும். யோசேப்பு மரியாளை விவாகம் செய்வதாக வாக்கு கொடுத்திருந்தான். அது விவாகமான நிலை என்பதாக தேவன் கூறினார். மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டியிருந்தாள். அந்த நிலையில் அவள் அவனுடைய மனைவியாக கருதப்பட்டாள். மத்.1:18&20, உபா.22:23&24. பாருங்கள் ஒரு ஆணுக்கு பெண் நியமிக்கப்பட்ட உடனே அவள் அவனுக்கு மனைவியாகி விடுகிறாள். இந்த நியமனத்தை உறுதி செய்யத்தான். திருமணம் நடத்தி வைக்கிறார்கள். பழைய ஏற்பாடு பிரமாணத்தின்படி நீங்கள் ஒரு பெண்னை மணந்து கொள்வதாக வாக்கு கொடுத்துவிட்டு வேறொருத்தியை மணந்துகொண்டால் நீங்கள் விபச்சாரம் செய்பவராகி விடுவீர்கள். ஒரு பெண்ணுக்கும் இதே காரியம் தான். (கே.ப 313).

38. திருமணத்தில் அழகுக்கும், உலக அந்தஸ்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கக் கூடாது. ஜலத்தினாலும் ஆவியினாலும் மறுப்பிறப்பு அடைந்த ஒருவனை, ஒருத்தியை தெரிந்தெடுக்க வேண்டும். யேசேபேல் ஒரு அழகான பெண். அவளுடைய அழகைக் கண்டு ஆகாப் மதிமயங்கினான். அவன், அவளுடைய உண்மையான தன்மையை காணவில்லை. அவள் தேசத்தில் ஜனங்களிடையே விக்கிரகாராதனையை கொண்டு வந்தாள். ஆகாப் செய்ததையே இன்றும் அநேகர் செய்கின்றனர். முதன்முறையாக உலகம் முழுவதும் அழிக்கப்பட்டதற்கு அழகுள்ள பெண்களே காரணம். தேவ குமாரர் மனுஷ குமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களாகக் கண்டு, அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்து கொண்டார்கள். ஆதி. 6:2. பெண் இனங்கள் அனைத்திலும், மானிட வர்க்கத்தைச் சார்ந்த பெண் இனம் மாத்திரமே ஆணைக் காட்டிலும் அழகுள்ளது. தேவனின் மூல சிருஷ்டிப்புக்கள் அனைத்திலும் ஆண் இனமே அழகுள்ளது. ஆனால் மானிட இனத்தில் மாத்திரமே பெண் அழகுள்ளவள். அவள் மனிதனை வஞ்சிப்பதற்கென்றே அவ்வாறு உருவமைக்கப்பட்டிருக்கிறாள். அவளுடைய வெளிப்புற அழகின் உள்ளே நரகம் மறைந்துள்ளது. தேவன் நற்பண்புகளைப் பார்க்கிறார். மனிதனோ இயற்கை அழகைப் பார்க்கிறான். அது வஞ்சகம் உள்ளது. வஞ்சிப்பதற்காக ஒரு பெண்ணுக்கு அழகு கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு அழகிய பெண், தன் அழகை சரியான வழியில் உபயோகிக்காமற்போனால், அது அவளுக்கு சாபமாக அமைந்துவிடும். அது அவளை மற்றெல்லாவற்றைக் காட்டிலும், வேகமாக நரகத்திற்கு அனுப்பிவிடும்.

39. தேவனுடைய நீதியானது மிருகமோ, தாவரமோ, மச்சமோ, அல்லது வேறு எந்த ஜீவராசியானாலும் சரி அது பூமியின் மேல் தன் விதையை உடைய கனிகளை தன்தன் ஜாதியின் படியே, இனத்தின்படியே பிறப்பிக்க வேண்டும் ஆதி 1:11–25. மனுக்குலமும் இயற்கைக்கு உட்பட்டது. ஆதலால் மனுக்குலமும் இந்த பூமியின் மேல் தன் விதையை உடைய கனிகளை தன் ஜாதியின்படியே, இனத்தின்படியே பிறப்பிக்க வேண்டும். தேவன் ஒருவனை எந்த ஜாதியில், இனத்தில், வகுப்பில், குலக் கோத்திரத்தில் உருவாக்கியுள்ளாரோ அதிலே

நிலைத்திருந்து தன் தன் விதையை உடைய கனிகளைப் பிறப்பிக்க வேண்டும். இதில் கலப்படம் எதுவும் கூடாது. **தீர்க்கதரிசி தனக்கு கலப்பு விவாகத்தில் நம்பிக்கை இல்லை என்றும், சிருஷ்டிகர் தன்னை உண்டாக்கின விதமாகவே தான் இருக்க விரும்புவதாக கூறுகிறார்.** (கே.ப. 425). நான் அனைத்து குலக் கோத்திரத்தார் மத்தியில் பழகுகிறேன். அவர்கள் வீடுகளில் உணவு அருந்துகிறேன். அவர்கள் இல்லங்களில் தூங்குகிறேன். அவர்கள் எந்த குலக் கோத்திரத்தார் ஆகிலும் எனக்கு அதில் எந்தவிதமான வேற்றுமையும் கிடையாது. அவர்கள் கிறிஸ்தவர்களாயிருப்பார்களானால் அவர்கள் என் சகோதரர்கள், சகோதரிகள். இஸ்ரவேல் புத்திரரில் ஒருவன் தங்கள் பிதாக்களுடைய கோத்திரத்தின் சுதந்திரத்தில் நிலை கொண்டு அதிலே பெண் கொள்ள வேண்டும். கொடுக்க வேண்டும், சுதந்தரமானது ஒரு கோத்திரத்தைவிட்டு வேறொரு கோத்திரத்தை சேரக்கூடாது. உபா. 36–9. விவாகம் இம்மைக்குரியது. மத்.22:23–30 மாற்.12:23–25 லூக்.20:34,35.

40. திருமண நியமத்தில் வரதட்சணை ஒரு பெரிய கொடுமையாக விசுவாசிகள் மத்தியில் காணப்படுகிறது. எலியேசர், ஈசாக்குக்கு பெண் பார்க்க சென்றான். அப்போழுது தன் எஜமானுடைய சகலவித உச்சிதமான பொருட்களை கொண்டு சென்றான். ஆதி 23:10 & 53. பெண்களுக்கு அவர்கள் வீட்டில் நன்கொடைகள் கொடுக்கப்பட்டன. 1 இரா. 9:26, யோசு 15:19. இவ்வாறாக திருமண நேரத்தில் இருதரப்பினரும் தங்கள் தங்கள் தகுதிகளுக்குத்தக்கதாக பரிசுகளையும், நன்கொடைகளையும் மனப்பூர்வமாக பரிமாறிக் கொண்டனர்.

41. திருமணம் மணமகனுடைய இல்லத்தில் அங்குள்ள தேவனுடைய வீட்டில் ஐந்து வகை ஊழியத்தில் உள்ள ஊழியன் ஒருவனைக் கொண்டு நடத்தப்படவேண்டும். விவாகம் என்பது தேவனுடைய வீட்டுக்குரியது ஆதலால் ஊழியன் அல்லாத ஒருவனைக்கொண்டு திருமணம் நடப்பிக்கப்படக்கூடாது. திருமணப்பதிவாளரை கொண்டு திருமணம் செய்துவைப்பது தவறு.

42. திருமணத்திற்குப்பின் கணவன் மனைவி ஜெபத்திற்கும், உபவாசத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்து இருக்கவேண்டும் என்று சம்மதித்தாலன்றி ஒருவரைவிட்டு ஒருவர் பிரியக்கூடாது 1 கொரி. 7:5. பணம் சம்பாதிப்பதற்காக கணவனும் மனைவியும் பிரிந்துவாழும் இல்லறவாழ்க்கை தேவசித்தத்திற்குப் புறம்பானது.

43. சகோ. பிரன்காம் தன் மனைவியை குறித்து இவ்வாறு கூறுகிறார்: கர்த்தாவே, நான் கூட்டங்களுக்கு செல்வதைக் குறித்தும், கூட்டங்கள் நிமித்தும் அநேக மாதங்கள் வெளியே தங்குவதை குறித்தும் ஒருமுறையாவது ஒரு வார்த்தையும் அவள் கூறினதில்லை. அது எதுவாயிருந்தாலும் அவள் ஒரு முறை கூட வாயைத் திறந்து ஒன்றும் கூறினதில்லை. அவள் எப்பொழுதுமே சலவைக்கு என் துணிகளை அனுப்பி என் சர்ட்டுகளை அவளே துவைத்து, வைப்பாள். நான் கூட்டத்திற்கு செல்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் ஆயத்தம் செய்து வைப்பான். இவைகளைச் செய்த பின்பும் அவள் எவ்வாறு தேவனைச் சேவிப்பது என்று யோசிப்பாள் என்றேன். ஸ்திரீகளே, உங்கள் கணவருக்கு சேவை செய்யும் போது, நீங்கள் தேவனுக்கு சேவை செய்கிறீர்கள். நிச்சயமாக. (பார்வையைத் திருப்பி இயேசுவை நோக்கிப் பாருங்கள். பக்கம் 34, முதல் பத்தி) என் மனைவியும் அவ்வண்ணமாகவே இருப்பதால் நானும் அதில் பெருமைப்படுகிறேன். சகோதரியே, நீங்கள் உங்கள் கணவனுக்கு எப்படி?. பாருங்கள், ஒரு ஸ்திரீ தன் கணவனுக்கு செய்யும் சேவையே அவள் தேவனுக்கு செய்யும் தொண்டு ஆகும். கணவனுக்கும் மனைவிக்கும் இடையே நிச்சயமாக கருத்து வேறுபாடுகள் சில காரியங்களில் இருக்கத்தான் செய்யும். ஆனாலும் நீங்கள் உங்கள் இருதயத்தின் ஆழத்தில் இருந்து ஒருவரை ஒருவர் நேசித்து நீங்கள் கிறிஸ்துவுக்குள் இணைக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

44. ஸ்திரீ தன் மாதவிலக்கு காலத்தில் தன் புருஷனோடு பாலுறவு கொள்ளக்கூடாது. லேவி. 18:19. சபை கூடுதலிலும் அந்நாட்களில் அவள் பங்கு கொள்ளக்கூடாது என்பது என் ஆலோசனை.

45. ஸ்திரீயானவள் பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள். 1தீமோ.2:15. பிள்ளை பெறுவதினால் மனைவி இரட்சிக்கப்படுவதில்லை. அப்படியிருந்தும் தெளிந்த புத்தியோடும் விசுவாசத்திலும் (அப்படிபட்ட ஸ்திரீகளை குறித்துதான் பவுல் பேசுகிறான். ஏற்கனவே இரட்சிக்கப்பட்ட ஸ்திரீகளை குறித்து பாருங்கள்) அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால் (பாருங்கள், அவள் நிலை கொண்டிருந்தால், அவள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டவள்) பிள்ளை பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள். (பவுல் உலகப்பெண்கள் குழந்தைகளை பெறுவதைக்கூறித்து இங்கு கூறவில்லை) ஒரு குழந்தையை பெறுவது அவள் இரட்சிக்கப்படும்படி செய்வதில்லை. ஆனால் அவள் பிள்ளைகளை வளர்த்து தன் கடமையை செய்கிறாள். அவள் விசுவாசத்திலும், பரிசுத்தத்திலும் தெளிந்தபுத்தியிலும் நிலை கொண்டிருந்தால் பிள்ளைப் பேற்றில் இரட்சிக்கப்படுவாள் She shall be saved in child bearing if she continue in faith and holiness with all soberiety (why we are not a denomination, para 147) அந்த நிபந்தனையை இங்கு கவனியுங்கள். நீங்கள் விசுவாசித்தால் சுகம் அடைவீர்கள். நீங்கள் விசுவாசித்தால், நீங்கள் ஆயத்தமாயிருந்தால் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வீர்கள். அது போன்று அவள் இந்த காரியங்களை தொடர்ந்து செய்வாளானால் (பாருங்கள்) இரட்சிக்கப்படுவாள். (பரிசுத்த ஆவியின் பெயரில் கேள்விகளும் பதில்களும். பத்தி 110&111) ஏனென்றால், அவள் அப்பொழுது மனிதனின் ஒரு பாகமாகிவிடுகிறாள்.

46. இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள பெண்கள் ஸ்தாபனத்தில் உள்ள மனிதர்களை விவாகம் பண்ண நேர்ந்தது, அவர்களுக்கு புகுந்த வீட்டில் எதிர்ப்புகள் ஏற்பட்டு, அவர்களின் ஆவிக்குரிய ஆகாரத்தை மாற்ற நினைப்பார்களானால், ஒரு புறா ஒரு பருந்துடன் ஆகாரம் புசிக்கமுடியாது என கூறி உங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருங்கள் (கே.ப. 364.) அவர்கள் உங்களிடம் வேதத்தை படிக்கக்கூடாது, சபைக்கு

செல்லக்கூடாது என்று கூறி உங்களுக்கு அனுமதி மறுத்தால் நீங்கள் அதற்கு கீழ்படியவேண்டிய அவசியம் இல்லை. ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயை ஆளுகை செய்கிறவன் என்ற காரணத்தினால் அவள் மேல் தன் அதிகாரத்தை பிரயோகிக்கக் கூடாது. ஸ்திரீயை அடிக்கவோ இழுத்துப் போட்டு உதைக்கவோ மனிதனுக்கு ஸ்திரீ மேல் உரிமை கிடையாது. (கே.ப. 429) நிலைமை மோசமாய் போகுமானால் அவள் கிறிஸ்துவுக்காக அவனை விட்டு பிரிந்து வாழலாம், ஆனால் மறுமணம் செய்யக்கூடாது. உங்களுக்குப் பங்கு கொள்வதற்கு நல்ல ஆவிக்குரிய சபை இல்லாவிட்டால் நீங்கள் உங்கள் வீட்டிலிருந்து வேதத்தையும், ஆவிக்குரிய செய்தியையும் தியானியுங்கள், செய்தி ஒலி நாடாக்களை கேளுங்கள். (கே.ப. 353).

47. இல்லற வாழ்க்கையில் மனைவி ஒரு விசுவாசி, கணவன் ஒரு அவிசுவாசி, மனைவி புருஷனுக்கு எல்லாவற்றிலும் கீழ்ப்படிந்து இருக்க வேண்டும், இது வேதப்பிரகாரமான போதனை. அவிசுவாசியாகிய புருஷன் விசுவாசியாகிய தன் மனைவியை தேவபக்தியற்ற காரியங்களில் ஈடுபடுத்த முயற்சிக்கிறான். உலகப்பிரகாரமாக ஆசாபாசங்களில் பங்கு கொள்ள நிர்ப்பந்திக்கிறான். இந்நிலையில் அவள் தேவனுக்கென்று தன் புருஷனை விட்டு பிரிந்து வாழலாம். அப்படிப்பட்ட ஒருவனுக்கு கீழ்ப்படிய தேவை இல்லை. முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் என வேதம் கூறுகிறது. (கே.ப. 285) ஆனால் அவள் மறுமணம் செய்ய முடியாது. அதே நேரத்தில் தன் நற்கிரியைகளின் மூலமாக விசுவாசியாகிய மனைவி அவிசுவாசியாகிய தன் புருஷனை ஆதாயப்படுத்தினால் அவள் பாக்கியவதி எனப்படுவாள்.

48. இளம் விதவையானவள் விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடம் உண்டாக்காமல் இருக்க விவாகம் பண்ணி பிள்ளைகளைப் பெற்று, வீட்டை நடத்துகிறவளாய் இருக்க வேண்டும். 1 தீமோ. 5:14.

49. விபச்சாரம் செய்யாதிருப்பாயாக யாத்.20:14. ஸ்திரீ கரைபடுத்தப்படக்கூடாத குணாதிசயங்களை உடையவளாயிருக்கிறாள். அவள் அதில் குறைவு கொண்டு வருவாளாகில் தன் ஜீவ காலமெல்லாம் குறைவுபட்டவளாய் இருக்கிறாள். எவ்வளவுதான் அவளுக்கு மன்னிக்கப்பட்டாலும் அவள் நீதியாக்கப்படமுடியாது. கறைப்படுத்தினதற்காக மன்னிக்கப்படலாம். ஆனால் இந்த ஜீவியத்தில் நீதியாக்கப்படமுடியாது. அது எப்பொழுதும் அவளோடிருக்கும். ஒருவேளை அவள் மன்னிக்கப்படலாம். ஆனால் நீதியாக்கப்படமுடியாது (கிறிஸ்துவின் மணவாட்டியின் காணமுடியாத இணைப்பு, பக்கம் 23, கடைசி பத்தி) ஒரு ஸ்திரீயைப் போல் எளிதில் வஞ்சிக்கவும், வஞ்சிக்கப்படவும் தக்கதாக வேறு எதுவுமே உருவமைக்கப்படவில்லை. சிருஷ்டிப்பு முழுவதிலும் கீழ்த்தரமான ஒரு நிலையில் வேறு எதுவுமே உருவமைக்கப்படவில்லை. எந்த மிருகமும் நடத்தை கெட்டதாக இருக்க முடியாது. தேவனுடைய சிருஷ்டிப்பில் வேறெதுவுமே ஒரு பெண்ணைத் தவிர நடத்தை கெட்டு, அத்தகைய கீழ்த்தர நிலையை அடைய முடியாது. ஸ்திரீ ஒருத்தி மாத்திரமே அவ்வாறாக இருக்க முடியும். பெண் மிருகங்கள் அவ்வாறாக இருக்க முடியாது. ஏனென்றால் அவைகள் யாவும் மூல சிருஷ்டிப்பில் உள்ளது. ஸ்திரீ மட்டும் தேவனுடைய மூல சிருஷ்டிப்பில் இடம் பெறவில்லை. அவள் இடம்பெற்றிருந்தால் பாவம் என்பது இருந்திருக்காது. மூல சிருஷ்டிப்பில் உள்ள எந்த மிருகமும் தன் இன அபிவிருத்தி உருப்பையும், தன் குட்டிக்கு பால் ஊட்டும் மார்பகத்தையும் விபச்சாரத்திற்கும், சிற்றின்பத்திற்கும் உபயோகப்படுத்துவதில்லை. உப பொருளாக உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பெண்ணே தன் அவயவங்களை விபச்சாரத்திற்கும், சிற்றின்பத்திற்கும் உபயோகப்படுத்துகிறாள். மனுக்குலத்தின் வீழ்ச்சிக்கு இவளே காரணம்.

50. ஒருவன் வேசித்தனத்தின் நிமித்தமாக தன் மனைவியை தள்ளிவிடலாம், ஆனாலும் இருவரும் மறுமணம் செய்ய முடியாது. தள்ளிவிடப்பட்ட மனைவி, புருஷன் உயிரோடு இருக்குமளவும் எக்காரணத்தைக் கொண்டும் மறுமணம் செய்ய முடியாது. அவ்வாறாகவே புருஷனும். **விவாகரத்து விவாகத்தை கலைப்பது இல்லை.**

51. ஒரு ஸ்திரீயானவள் ஒரு மனிதனை மணந்து, பிறகு தான் நேசிக்கும் இன்னொருவனோடு தொடர்பு கொண்டு அவனுடன் சிலகாலம் வாழ்க்கை வாழ்ந்து, பின் தன் முதல் புருஷனிடம் திரும்பிவந்தால் அவன் அவளை ஏற்றுக்கொள்ளக்கூடாது. அவளை அவன் தள்ளிவிடவேண்டும். (இப்பொல்லாத காலத்தின் தேவன், பத்தி.162. ஒரு ஸ்திரீ புருஷனை விட்டு பிரிந்து வேறொருவனோடு வாழத்தலைப்பட்டால் அவள் விபச்சாரி என்றும், புருஷன் அவளை மறுபடியும் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்றும் வேதம் கூறுகிறது. (ஏழுசபை கால வியாக்கியானம், பக்கம் 125.)

52. விவாகரத்து செய்த ஒருவனை ஒரு கன்னிப்பெண் திருமணம் செய்து கொள்ளக்கூடாது. அப்படி செய்தல் அவர்கள் இல்லற வாழ்க்கை ஒரு விபச்சார வாழ்க்கை ஆகும். **விவாகரத்து விவாகத்தை கலைப்பது இல்லை.**

53. ஒரு ஸ்திரீ தன் புருஷன் இறந்தால் மட்டுமே மறுமணம் செய்து கொள்ளலாம். மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்கும் காலமளவும் அவனுடைய பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள். தன் புருஷன் மரித்த பின்பு தனக்கு இஷ்டமானவனும், கர்த்தருக்கு உட்பட்டவனுமாயிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள். 1 கொரி. 7:39. ஆகிலும் பவுல் தன்னுடைய அபிப்பிராயத்தின்படி அவள் அப்படியே இருந்துவிட்டால் பாக்கியவதியாயிருப்பாள் என்கிறான். 1 கொரி. 7:40.

54. இரட்சிக்கப்பட்ட ஒரு மனைவி, அவள் கணவன் இரட்சிக்கப்படாதவன். இந்நிலையில் அவன் அவளை அணுகினால், அவள் மறுக்கக்கூடாது. ஏனென்றால் அவன் அவள் கணவன். அவள் அவ்விதம் செய்வதினால் அவனை தேவனிடத்தில் இருந்து அதிக தூரம் துரத்தி விடுவாள். பாருங்கள் அவன் அவளுடையவன், அவள் அவனுடையவள். (கே.ப.312.) ஒரு முறை திருச்சி மாவட்டத்தில் பிள்ளை பேறு இல்லாத வயதான சகோதரனுக்கும், சகோதரிக்கும் இல்லற வாழ்க்கையில் ஏற்பட்ட பிரச்சனைகளை தீர்த்து வைக்க

அழைக்கப்பட்டேன். அப்பொழுது அந்த சகோதரி தன் கணவனைப் பார்த்து இந்த வயதில் இவர் என்னோடு உடல் உறவு கொள்ள விரும்புகிறார். நான் எப்படி அதை அனுமதிக்க முடியும் என்று கூற, நான் அவர்களை கண்டிக்க நேர்ந்தது. உங்கள் கணவன் உங்கள் சரீரத்திற்கு சொந்தக்காரர் என்பதை மறந்துவிடாதீர்கள். எபே.5:28.

55. தீர்க்கதரிசி குடும்பக் கட்டுப்பாட்டை ஆமோதிக்க முடியாது என்கிறாள். (கே.ப. 421.)

56. தேவன் மனிதனை சந்தோஷமாக பிள்ளைத்தாச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப் பண்ணுகிறார். உங்களுக்குள் கர்ப்பம் விழுகிறதுமில்லை. யாத். 23:26. உங்களுக்குள் ஆணாகிலும் பெண்ணாகிலும் மலடியாயிருப்பதில்லை. உபா. 7:14. மலட்டுத் தன்மையிலே கணவன் மனைவியை மரணம் பிரிக்குமாயின் அவர்கள் தெரிந்துகொள்ளுதல் சரியல்ல. அவர்கள் திருமணம் தேவசித்தத்திற்கு புறம்பாக இருந்தது. அவர்கள் கிறிஸ்துவினுடையவர்களல்ல ஆபிரகாமின் சந்ததியுமல்ல, அதோடு மட்டும் அல்ல வாக்குத்தத்தின்படி சுதந்தரரும் இல்லை.

57. மலடியாயிருந்த கர்ப்பங்கள் ஆசீர்வதிக்கப்பட்டன. சாராள் ஆதி. 11:30, 21:2 ரெபெக்காள். ஆதி. 25:22. ராகேல். ஆதி. 29:31, 30:22, சூனேமியாள். 2. இராஜா. 4:14, 17:7. எலிசபெத். லூக். 1:7&57 & கிறிஸ்துவுக்குள்ளானவர்கள் ஆபிரகாமின் சந்ததியாயும் வாக்குத்தத்தின்படி சுதந்தரருமாய் இருப்பதினால் (கலா.3:29) அவர்கள் மத்தியில் மலட்டுத்தன்மை காணப்படாது.

58. ஒரு ஆண் பெண் இல்லற வாழ்க்கையின் நோக்கமே பலுகிப்பெருகத்தான். நாம் பலுகிப் பெருகவே தேவனால் ஆசிர்வதிக்கப்பட்டோம் ஆதி.1:26. ஒரு ஆண் பெண் சேர்க்கை சிற்றின்பத்திற்காக அல்ல, மாறாக அது பலுகிப்பெருகவே. கர்ப்பத்தடையை செய்து சிற்றின்பத்தை அனுபவிப்பது இல்லற வாழ்க்கையின் நோக்கத்தை சீர்குலைப்பது ஆகும். ஒரு கிறிஸ்தவன், கிறிஸ்தவள் மாம்ச இச்சைக்கு உடலை பிரோஜனபடுத்தக்கூடாது. மாம்ச இச்சை தேவனால் உண்டானது அல்ல 1 யோ. 2:16. ஆதலால் கர்பத்தடை செய்யக்கூடாது.

59. பிள்ளைப்பேறு ஒரு ஸ்திரீக்கு மரணத்தை கொண்டுவரும் என்ற நிலை உருவாகுமானால் அந்த ஸ்திரீ கர்பத்தடை செய்வதில் எந்தவிதமான தவறும் இல்லை. ஆனால் தேவனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை என்று அவள் விசுவாசிப்பாளானால் அவளது விசுவாசம் அவளை இரட்சிக்கும். அவள் மரணத்தை மேற்கொள்வாள்.

60. பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். கர்ப்பத்தின் கனி கர்த்தரால் கிடைக்கும் பலன். சங். 127:4. இனச்சேர்க்கை, இதன்பின் கர்ப்பம் உண்டாகிறது. பின் இந்த கர்ப்பத்தை கலைப்பது கொலை பாதகம் ஆகும். ஏனென்றால் உருவாகிய ஒரு கருவை கலைப்பது கொலை பாதகம் ஆகும். ஒரு உயிரை கொலை செய்வது குற்றம், அச்செயலால் அவனுக்குள், அவளுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது. யாத். 20:13, 1 யோ 3:15. ஒரு கொலை பாதகன் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவான். வெளி. 21:8.

61. இதோ மலடிகள் பாக்கியவதிகள், பிள்ளைப்பெறாத கர்ப்பங்களும், பால்கொடாத முலைகளும் பாக்கியமுள்ளவைகள் என்று சொல்லப்படும் நாட்கள் வரும். லூக் 23:9. நாம் இப்படிபட்டதான நாட்களில் தான் வசித்து வருகிறோம். தங்களுக்கு பிள்ளைகளே வேண்டாம் என்கிறதான கொடிதான நாட்கள் ஒன்றில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். அதாவது, கர்ப்பத்தடை செய்கிறவள் புத்தியுடையவள் என்று போற்றப்படும் நாள் இது. ஆனால் கர்ப்பத்தடை, கருச்சிதைவு தேவனுடைய பிரமாணத்தை சீர்குலைக்கும் பாதகச் செயலாகும்.

62. பெண்கள் வீட்டில் தரித்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். தீத். 2:5. அவள் வீட்டில் தரித்திருந்து ஒரு பண்புள்ள பெண்ணாக இருந்து தன் கர்ப்பைக் காத்துக்கொள்ள வேண்டும். நீ ஒரு ஸ்திரீயாக இருந்து உன் கணவன் ஆரோக்கியம்முள்ளவனாயிருந்து, அவனுக்கு ஒரு நல்ல வேலை இருந்து அவன் வேலை செய்து கொண்டிருப்பானானால் நீ வீட்டில் தங்கி உன் பிள்ளைகளை கவனித்து அவர்களை வளர்த்து கர்த்தரை நேசி. அது உனக்கு மகிழ்ச்சியைத் தரும். துணிகளை சலவை செய்தல் போன்ற வீட்டு வேலைகளை நீ செய்து பின் உனக்கு நேரம் கிடைக்குமானால் தேவனை எப்படி நேசிப்பது என்று உன் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடு. (கே.ப. 298.)

63. இக்காலத்தில் மனுஷர்களின் மனப்பக்குவம் எப்படி இருக்கிறது என்றால், தானும் சம்பாதிக்க வேண்டும், மனைவியும் சம்பாதிக்க வேண்டும், கை நிறைய பணம் சம்பாதிக்க வேண்டும், மிக சௌகரியமாக, சுகபோகத்துடன் வாழ வேண்டும், சொத்து சுகங்களை சேர்க்க வேண்டும் என்பதாக உள்ளது. இதனால் ஆண்கள் தாங்கள் தொழில் செய்யும் இடத்திற்கு தங்கள் மனைவிகளை கூட்டிச் சென்று, தங்கள் தொழிலில் அவர்களது உதவிகளைப் பெறுகிறார்கள். அல்லது கணவன் ஒரு அலுவலகத்தில், மனைவி மற்றொரு அலுவலகத்தில் வேலை செய்கிறார்கள். ஆனால் ஆதியில் அப்படி இல்லை. மனைவி வீட்டில் தரித்திருக்கிறவர்களாகவே காணப்பட்டாள். கர்த்தர் மம்ரேயின் சம பூமியிலே ஆபிரகாமுக்கு தரிசனம் ஆன போது அவனிடம் உன் மனைவி சாராள் எங்கே என்று கேட்டபொழுது, அவன் இதோ, கூடாரத்தில் இருக்கிறான் என்றான். ஆதி. 18:9. பெண்கள் எப்பொழுதும் வீட்டில் தரித்திருக்கிறவர்களாக இருக்க வேண்டும். தீத் 2:5.

64. அவள் உங்களைப் பார்த்து (தன் கணவனைப் பார்த்து) புன்முறுவல் செய்துவிட்டு வேறொருவன் அலுவலகத்துக்குச் சென்று வேலை பார்த்து விட்டு திரும்பி வந்து என் கணவனே என்றால், ஓ! எனக்கு அதில் நம்பிக்கை இல்லை. இன்று காவல் துறையிலும் பெண்கள் பணிபுரிகின்றனர். என்ன ஒரு அவமானம்.

அது விபச்சாரத்துக்கு (Debanchery) ஒரு அடையாளமாய் உள்ளது. (அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு பத்தி 150.) பெண்களுக்கு ஸ்தனங்கள் அவள் தன் குழந்தையை பாலூட்டி வளர்க்க கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் நவநாகரீக உலகில் வேலை செய்யும் பெண்கள், தங்கள் மார்பகங்கள் கட்டாக இருப்பதற்காக தங்கள் குழந்தைகளுக்கு பால் கொடுப்பதில்லை. புட்டிப் பால் வாங்கிக் கொடுக்கிறார்கள். அவள் தான் வேலைக்குச் செல்லுமிடத்தில் கவர்ச்சியாக காணப்படுவதற்காக தன் மார்பகத்தை விறைப்பாக வைத்துக் கொள்ள விரும்புகிறாள். தன் மார்பகத்தை எடுப்பாக காட்ட அதற்கேற்றபடி விறைப்பான பிரா, (Bra) வாங்கியும் மாட்டிக் கொள்கிறாள். இது பெண் குலத்திற்கே அவமானம். தேவன் எதற்காக மார்பகத்தைக் கொடுத்தாரோ அந்த நோக்கத்தை சாத்தான் சீர்குலைக்க அது சாத்தானின் கண்ணியாக இருக்கிறது. அதற்கு அவனுடைய பறவைகள் அவனுடைய வலையில் விழுகிறது. நிச்சயமாக நீங்கள் வேலை செய்யுமிடத்தில் ஆபாசமான பேச்சுக்கள், நகைச்சுவைத் துணுக்கள் இருக்கும். அங்கு ஒரு நல்ல சுத்தமான ஸ்திரீ உட்கார்ந்திருந்து எப்படி அந்த அசுத்தமான அவலட்சனமான காரியங்களை கேட்டும், அதில் பங்கு கொண்டும் இருக்க முடியும் ?. ஆண்கள் மத்தியில் பெண்கள் வேலை செய்து கொண்டு, நிச்சயமான ஒரு பரிசுத்தமான வாழ்க்கை வாழ முடியாது. தங்கள் கற்பை காத்துக் கொள்ளவும் முடியாது.

65. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆசிரியர்கள், ஆசிரியைகள் மாணவ, மாணவிகள் மத்தியில் ஆபாசமான துணக்குகளை பேசி இளம் வயதினர் வாழ்க்கையைக் கெடுக்கிறார்கள். அதுவும் ஆண்கள் பள்ளியில் பெண்களையும், பெண்கள் பள்ளியில் ஆண்களையும் ஆசிரியர்களாகப் போட்டு மாணவ மாணவிகளின் வாழ்க்கையைப் பாழாக்குகிறார்கள்.

66. நீங்கள் டவுண், நகரம் மற்றும் மாநகரத்தில் பெண்கள் வேலைக்கு காலை செல்லும் போதும், மாலை வீட்டுக்கு திரும்பும் போதும் அவர்கள் பஸ் பிரயாணத்தைப் பாருங்கள். பிரயாணத்தில் உள்ள நெருக்கடியில் ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் முன்னும் பின்னும் இடித்துக் கொண்டும், அரவணைத்துக் கொண்டும் நின்று கொண்டு சிற்றின்பத்தை அனுபவிக்கிறார்கள். அனுதினமும் வேலைக்குச் சென்று திரும்பும் பெண்களுக்கு ஏற்படும் இந்த அரவணைப்பினால், அவர்களுடைய ஒவ்வொரு அவயங்களும் அதனதன் உணர்ச்சியில் மறத்துப் போய்விடுகின்றன. இதனால் ஒரு ஆண் உடல், அவள் மீது பட்டால்கூட அவளுக்கு கூச்சமோ, வெட்கமோ, நாணமோ எதுவும் இல்லாமல் போய் விடுகிறது. இது எருமை மாடு மீது மழை பெய்தால் அது எவ்வித உணர்சியும் இன்றி இருப்பது போலாகும். வீட்டில் தன் புருஷனுடைய அரவணைப்பில் அனுபவிக்க வேண்டிய சுகத்தை பல ஆண்களிடம் தன் பஸ் பிரயாணத்தில் அனுபவிக்கிறாள். இதுதான் இன்றைக்கு வேலைக்குச் செல்லும் பெண்கள் அவல நிலை. அலுவலகத்திலும் வெளியிலும் இதே நிலைதான். ஆதலால், கற்பு, பரிசுத்தம், மானம், மரியாதை, கௌரவம் உள்ள எந்த பெண்ணும் வெளி உலகத்திற்கு வேலைக்குச் செல்லமாட்டாள். பண சம்பாத்தியத்தைக் குறிக்கோளாகக் கொண்ட பெண்கள் மட்டுமே வேலைக்குச் செல்வார்கள்.

67. பெண்களுக்கு வீட்டில் தங்க விருப்பம் இல்லை. அவர்களுக்கு குடும்பத்தை கவனித்துக் கொள்ள பிரியம் இல்லை. அவர்கள் குழந்தைகளை கவனித்துக் கொள்ள யாரையாகிலும் அமர்த்தி விட்டு விருந்துக்குச் சென்று வருகின்றனர். (அவருடைய வருகையின் அடையாளமாக பிரசிக்கும் சிகப்பு விளக்கு பத்தி 176.) ஸ்திரீ வீட்டிற்கு வெளியே சென்று வேலை பார்ப்பது நவீன கலாச்சாரமாகி விட்டது. இதனால் வீட்டில் குழந்கைகளுக்கு முழுநேரத் தாய் கிடைப்பது குறைந்துகொண்டே போகிறது. பெண்களுக்கு படிப்பது அவசியம் தான். ஆனால் அவர்களுக்கு தங்கள் வீட்டை கவனிப்பதை விட பெரிய பொறுப்புள்ள வேலை வேறெதுவும் கிடையாது. ஒரு பெண் திருமணமானவுடன் குடும்ப பெண்ணாய் இருந்து தாய்மைக்குத் தன்னை அர்பணித்துக் கொள்ளவேண்டும். ஆண் சம்பாத்தியம் போதாது பெண் சம்பாத்தியமும் தேவை என்ற நிலை இக்காலத்தில் நிலவிவருகிறது. ஏனென்றால் போதும் என்ற மனஅடக்கம், மனப்பான்மை மக்கள் மத்தியில் இல்லை. பண ஆசையே எல்லாத்தீமைக்கும் வேர் என்பதை மறந்துவிடக்கூடாது.

68. குடும்பத்தை போஷிக்கவேண்டியது கணவனது கடமை ஆதி. 3:19, எபே. 5:29 ஆனால் கணவனால் சம்பாதிக்க முடியவில்லை என்ற ஒரு சூழ்நிலை குடும்பத்தில் காணப்படுமாகில் பெண்கள் வேலை செய்யலாம். அதுவும் கூடிய மட்டும் தன் இல்லத்தில் இருந்து ஏதாவது ஒரு தொழில் செய்வது நலம். உதாரணமாக தையல் மெஷின் வைத்து தைத்துக்கொடுக்கலாம், சிறு பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுக்கலாம். ஏதாவது சிறுசிறு கைத்தொழில்களை வீட்டில் இருந்துகொண்டே செய்யலாம்.

69. நீதி. 31 ஆதி. 13 வது வசனத்தில் அவள் ஆட்டு மயிரையும் சணலையும் தேடி, தன் கைகளினால் உற்சாகத்துடனே வேலைசெய்கிறாள் எனவும், 19வது வசனத்தில் தன் கைகளை இராட்டினத்தில் வைக்கிறாள். அவள் விரல்கள் கதிரைப் பிடிக்கும் எனவும், 22வது வசனத்தில் ரத்தினக் கம்பளங்களை உண்டு பண்ணுகிறாள், மெல்லிய புடவைகள் அவள் உடுப்பு எனவும் 16வது வசனத்தில் தன் கைகளில் சம்பாதியத்தினால் திராட்சை தோட்டத்தையும் நடுகிறாள் எனவும் வாசிக்கிறோம். இதிலிருந்து பெண்கள் சுறுசுறுப்புள்ள சிறந்த கைதொழிலாளிகளாக இருந்தார்கள் எனத்தெரிகிறது.

70. ஆனால் சுகபோகமான வாழ்க்கைக்காக பெண்களை வேலைக்கு அனுப்புவது தவறு. பொதுவாக பெண்கள் வேலை செய்து, அதில் கொண்டு வரும் வருமானத்தை கொண்டு ஒருவன் தன் குடும்பத்தை நடத்துவானாகில் அவன் தேவ சித்தத்துக்கு புறம்பானவன் அவனது இல்லற வாழ்க்கை கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்காது. தான் எதுவும் வேலை செய்யாமல் தன் மனைவியை வேலைக்கு அனுப்பி அவள் சம்பாத்தியத்தில் வாழ்க்கை வாழும் ஒரு விசுவாசி, ஊழியக்காரன் தன் நடத்தையில் மாதிரியற்று, யாதொரு வேலையும் செய்யாமல் பூமியின் பலனை புசித்து ஒழுங்கற்று திரிகிறவன்.

71. நீ வேலை செய்யக்கூடாது என்பதற்காக நர்ஸ் வேலையை விட்டு நீங்கி விட்டாய், நல்லது. நர்ஸ் வேலை பட்சாதாபத்துடன் செய்யப்படுவது ஒன்று. சேவை மனப்பான்மையை கொண்டிருக்க வேண்டும். (கே.ப. 366.)

72. தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு மிருகங்களிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாய் இருந்தது. ஆதி. 3:1. இந்த மிருகம் சபிக்கப்பட்ட பின்புதான் சர்ப்பமானது. இது ஏவாளை வஞ்சித்தது. ஸ்திரீயானவள் வஞ்சிக்கப்பட்டு, மீறுதலுக்குட்பட்டாள். இதனால் தேவனுக்கு வேறு ஒரு உடன்படிக்கை செய்ய அத்தியாவசியமாயிற்று. இதன்படி இனி ஸ்திரீ புருஷனோடு சம அந்தஸ்துடன் ஆளுகை செய்ய முடியாது. மாறாக தேவன் ஸ்திரீயை புருஷன் ஆண்டுகொள்ளும்படி செய்தார். உன் புருஷன் உன்னை ஆண்டு கொள்வான் என்றார். ஆதி. 3:16. அதே நேரத்தில் தகப்பனைப்போல தாயும் கனம் பண்ணப்படவேண்டும். யாத் 20:12.

73. இதன்படி, பூர்வகாலத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகள் தங்கள் புருஷர்களுக்கு கிழ்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். சாராள், ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி அவனுக்கு கீழ்ப்படிந்திருந்தாள். 1 பேது. 3:5 & 6. மனைவி தன் சொந்தப் புருஷனுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். எபே. 5:24, தீத். 2:5. ஒரு ஸ்திரீ தன் புருஷனுக்குத்தான் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். ஏனென்றால் அவளுக்கு தலை அவள் புருஷன். அவளை குறித்ததான கணக்கை தேவன் அவளிடத்தில் கேட்காமல் அவள் புருஷனிடத்திலே கேட்பார். மனைவிகளே, கர்த்தருக்கு கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்கு தலையாய் இருக்கிறது போல புருஷனும் மனைவிக்குத் தலையாய் இருக்கிறான். சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தன் சொந்த புருஷருக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்படிந்திருக்க வேண்டும். எபே. 5:22–24. நீ உன் புருஷனுக்கு எல்லாவற்றிலும் கிழ்படிந்திருக்கும் மனைவியாயிராவிட்டால் நீ தேவனுடைய சித்தத்துக்கு புறம்பானவள். நீங்கள் கீழ்படியாமலே இருந்து கொண்டே உங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்ளாதிருங்கள். ஏன்னென்றால் அப்படிச் செய்யும் நீங்கள் கிறிஸ்தவர்கள் அல்ல. நீங்கள் எவ்வளவு தான் நடனமாடி அந்நியபாஷை பேசினாலும் எனக்கு கவலை இல்லை. நீங்கள் கணவனுக்கு கீழ்ப்படியாதவரைக்கும் தேவனுடைய சித்தத்துக்கு புறம்பாயிருக்கிறீர்கள். உனக்கு உலகமும் வேண்டும். அதே சமயத்தில் உன் சாட்சியையும் வைத்துகொள்ள வேண்டும் என்று பார்க்கிறாய், தேவனுடைய சமூகத்தில் அப்படி நீ செய்யக் கூடாது என்று உனக்கு நன்றாக தெரியும். (உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?. பத்தி 80, 81.)

74. ஸ்திரீ தன் தலை மயிரை நீளமாக வளர்க்க வேண்டும். அது, அவள் தன் புருஷனுடைய அதிகாரத்துக்கு உட்பட்டவள், ஆளுகைக்கு உட்பட்டவள் என்பதற்கு வெளிப்புற அடையாளம் 1 கொரி. 11:10. ஆனால் அதிகாரம் அன்பின் அக்கரையாக இருக்க வேண்டும். நீண்ட தலைமயிர் அவளுக்கு மகிமையாயிருக்கிறது. 1கொரி. 11:15. சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா? என்று கூறப்பட்டிருப்பதால் சிருஷ்டிப்பின் ஆரம்பத்தில் இருந்தே பெண்கள் நீண்ட தலை மயிரை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாய் இருக்கிறது. ஒரு ஸ்திரீ தன் தலைமயிரினால் இயேசுவின் பாதத்தை துடைத்தாள் என்பதில் இருந்து அந்நாட்களில் பெண்கள் நீண்ட தலைமயிரை உடையவர்களாகவே இருந்தார்கள் என்பது புலனாகிறது. லூக். 7:38.

75. பெண்கள் தங்கள் தலையை எக்காரணத்தை கொண்டும் முக்காடிடக்கூடாது. அவ்வாறு முக்காடிட்டால் அவள் தன் மகிமையை மறைக்கிறாள், அது அவள் தன் புருஷனுடைய ஆதிகத்துக்கு உட்பட்டவள் அல்ல என்பதை அடையாளமாக காண்பிக்கிறது. திருமண நேரத்தில் கூட பெண்கள் தங்கள் தலையை வெண்ணிற ஆடையினால் முக்காடிடக்கூடாது. அது, அவள் இல்லற வாழ்க்கையை ஆரம்பிக்கும் முன்பே தன் கணவனுடைய அதிகாரத்துக்கு உட்பட்டு வாழவிரும்பாத பெண்ணாக இருக்கிறாள் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

76. அந்நாட்களில் வேசிகள் தான் தங்கள் தலையையும், முகத்தையும் மறைத்து முக்காடிட்டுக் கொண்டார்கள். ஏனென்றால் அவள் யாருடைய அதிகாரத்துக்கும், ஆளுகைக்கும் உட்பட்டவள் அல்ல, அவள் ஒரு விலைமாது என்பதற்கு அடையாளமாக முக்காடிட்டுக்கொண்டாள். ஆதி. 38:14 & 15.

77. பெண்கள் தங்கள் தோள் வரை தலைமயிரை வளர்த்து, இது நீண்ட தலைமயிர் என்கிறார்கள். அது குட்டையானது. (கே.ப.18)

78. ஸ்திரீ தன் தலைமயிரை கத்தரிக்கக்கூடாது, சிரைக்ககூடாது 1 கொரி. 11:6. அவள் அவ்வாறு செய்வாளாகில் தன் புருஷனை கனவீனப்படுத்துகிறாள். அப்பொழுது அவள் தவறான வாழ்க்கை வாழ்கிறவள் எனக்கூறி அவளைத் தள்ளிவிட அவள் புருஷனுக்கு வேதப்பிரகாரமான அதிகாரம் உண்டு. (கண்டும் காணாதது போல் விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம். பத்தி 211, மற்றும் (கே.ப.303.)

79. சிலர் திருமணம் ஆன பெண்கள் தானே தங்கள் தலைமயிரை நீளமாக வளர்க்க வேண்டும், அதை கத்தரிக்க கூடாது. ஆனால் இளம் பெண்கள், திருமணம் ஆகாதவர்கள் குறித்து என்ன என்று கேட்கிறார்கள்? திருமணம் ஆன, ஆகாத எந்தப்பெண்ணாக இருந்தாலும் தன் தலைமயிரை கத்தரிக்கூடாது, சிரைக்ககூடாது. (கே.ப. 297.)

80. தலைமயிர் பெண்களின் மகிமை என்று வேதம் கூற பெந்தெகோஸ்தே சகோதரர்களாகிய நீங்கள் உங்கள் பெண்கள் தலைமயிரை கத்தரித்துக்கொள்ள அனுமதிக்கிறீர்கள். அவள் தலைமயிர் கத்தரிக்கப்பட்ட நிலையில் ஜெபம் செய்வது கூட கண்டிக்கத்தக்கது. அப்படியிருக்க, அப்படிப்பட்ட பெண் பிரசங்கபீடத்தில்

ஏறி பிரசங்கம் செய்யவும், பாடல் குழுவில் பாடவும், ஞாயிறு பள்ளிகளில் போதிக்கவும் நீங்கள் அனுமதிக்கிறீர்கள். அது உங்களுக்கு அவமானம். உங்களை குறித்து நீங்கள் வெட்கப்பட வேண்டும். (நான் ஏன் ஸ்தாபனமாக்கப்பட்ட மார்க்கங்களுக்கு விரோதமானவன்? பத்தி 215.)

81. வானமும் பூமியும் ஒழிந்து போனாலும் தலைமயிரை கத்தரித்துள்ள அல்லது ஆண்கள் உடையை அணிந்துள்ள எந்தப் பெண்ணும் தேவனுடைய பார்வையில் சபிக்கப்பட்டவளே. (மூன்றாம் யாத்திரை பக் 55.)

82. அருவருப்பும், அசுத்தமான ஆவியும் உன்னில் இருக்க பரலோகம் எப்படிச் செல்வாய்? குட்டை முடியுடன் பரலோகம் எப்படி செல்வாய்? ஏனென்றால் தலைமயிர் கத்தரிக்கப்படுவது ஸ்திரீக்கு வெட்கம் என்று தேவன் கூறினார். அது மனைவி என்ற அடிப்படையையே அவள் மறுதலிக்கிறாள் என்று அர்த்தம். (பரிபூரன பலவீனத்தில் விளங்கும். பரிபூரண பலம். பக். 94. பத்தி 385.)

83. பெண்கள் தங்கள் தலைமயிரை முன்பக்கத்தில் கத்தரிக்கும் போது, அது ஒருபோதும் இனி நிண்ட தலைமயிராக கணக்கிடப்படாது, என்னென்றால் அவர்கள் தலைமயிரை கத்தரித்துவிட்டார்கள். என்னைப் பொருத்தஅளவில் அவர்கள் தங்கள் தலைமயிரில் கத்தரிக்கோல் வைக்காமல் இருந்தால் நலமாக இருக்கும். (கே.ப. 343) பெண்கள் தங்கள் தலைமயிரின் முனையை கத்தரிப்பதும் தங்கள் தலைமயிரை கத்தரித்ததாகவே கருதப்படும் (கே.ப. 368.)

84. பெண்கள் ஜெபம் பண்ணும் போதும் தீர்க்கதரிசனம் சொல்லும் போதும் நீண்ட தலைமயிருடன் காணப்பட வேண்டும். கத்தரிக்கப்பட்ட தலைமயிருடன் அவள் சபை கூடும் இடங்களில் பிரவேசிக்கக் கூடாது. ஜெபம் பண்ணுகிறபோதாவது, தீர்க்கதரிசனம் சொல்லுகிற போதாவது தன் தலைமயிரை முடிக்கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் தன் தலையை கனவீனப்படுத்துகிறாள். அது அவளுக்குத் தலைசிரைக்கப்பட்டது போல் இருக்கும் ஸ்திரீயானவள் முக்காட்டுக்கொள்ளாவிட்டால் தலைமயிரை கத்தரித்துபோடக்கடவள். தலைமயிர் கத்தரிக்கப்படுகிறதும், சிரைக்கப்படுகிறதும் ஸ்திரீக்கு வெட்கமானால் முக்காடிட்டுக் கொள்ளக்கடவள் 1கொரி. 11 5 & 6. ஸ்திரீயானவள் தேவனை நோக்கி ஜெபம் பண்ணுகையில் தன் தலையை முக்காடிட்டுக்கொள்ளாமல் இருக்கிறது அவலட்சனமாயிருக்குமோ என்று உங்களுக்குள்ளே நிதானித்துக்கொள்ளுங்கள். ஸ்திரீ தன் தலைமயிரை நீளமாய் வளர்க்கிறது அவளுக்கு மகிமையாய் இருக்கிறது என்று சுபாவமே உங்களுக்குப் போதிக்கிறதில்லையா? தலைமயிர் உங்களுக்கு முக்காடாககொடுக்கப்பட்டிருக்கிறது. 1 கொரி. 11: 13&15. இந்த வசனங்களை தியாணிக்கும் போது தலைமுக்காடு ஒரு பெண்ணுக்கு அவள் சேலை முந்தானை அல்ல, கைக்குட்டை அல்ல, தொப்பி அல்ல, மாறாக அது அவளுடைய நீண்ட தலைமயிர் என்பது புலனாகிறது.

85. தேவனுடைய பிள்ளையாய் இருக்கிற ஒரு ஸ்திரீயானவள், தான் தேவனுடைய ஒவ்வொரு வார்த்தைக்குள்ளும் தன்னை பிரதிஷ்டை செய்து கொண்டவள் என்பதை காண்பிக்கும்படி தனது தலைமயிரை நீளமாக வளர விடுகிறாள். ஸ்திரீயானவள் தன் தலைமயிரை வெட்டிக்கொண்டால் அவள் எவ்வளவு ஆவியில் நடனம் ஆடினாலும், பாடல் குழுவில் இருந்து பாடினாலும், அந்நிய பாஷையில் பேசி மேலும் கீழும் குதித்தாலும் அதைப்பற்றி எனக்கு கவலை இல்லை. அவள் மரித்தாள். 1கொரி. 11வது அதிகாரத்தின் படி அது கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால் என்னும் தேவனுடைய வார்த்தையாய் இருக்கிறது. (இப்பொல்லாத காலத்தின் தேவன். பத்தி 147.)

86. ஒரு ஸ்திரீ தன் தலைமயிரை கத்தரித்தால் அவள் தன் புருஷனுக்கு கீழ்படிய விரும்பாதவள் என கூறி அவள் புருஷன் அவளை தள்ளிவிடலாம். (கே.ப.1, பத்தி 77)

87. பெண்கள் தங்கள் தலைமயிரைப் பின்னி புறம்பாக தங்களை அலங்கரிக்கக் கூடாது 1பேது. 3:3. அலங்கரிப்பு பகட்டாக இருக்கவேண்டும் என்று எதாவது ஒன்றை கூட்டிச்சேர்த்தல் ஆகும். அது இவ்வுலகத்தின் வேஷம். பின்னப்பட்ட தலைமயிர் ஒரு வேசிக்கு அடையாளம். ஒரு தெரு வேசி தன் தலைமயிரை தலையில் இருந்து பின்னி அதை இப்படி சுற்றி விட்டு, தலையில் பூ வைத்துக்கொள்வது வழக்கம் – ஒரு விதமான வேசி, (இப்பொல்லாத காலத்தின் தேவன். பத்தி 176.) முற்காலத்தில் பெண்கள் தங்கள் தலைமயிரை பின்னாக இழுத்து அதை கட்டினார்கள் (கே.ப 251.) அதாவது பெண்கள் தங்கள் தலைமயிரை பின்னாக வாரி ஒருங்கிணைத்து கொண்டை போட்டுக் கொண்டார்கள். பெண்கள் தங்கள் தலைமயிரை அதன் இயற்கையான வளர்ச்சிக்கு விட்டுவிடவேண்டும். இயற்கைக்கு மாறாக அதை சுருள் சுருள் ஆக்கி தங்கள் தலைமயிரை அழகுபடுத்தக்கூடாது. வேசியே தங்கள் தலைமயிரைப்பின்னி, சுருள் விட்டு தலையில் பூ வைத்துக்கொள்வாள். (கே.ப. 251.)

88. தலைமயிரை ஒருங்கிணைக்க கிளிப், கேர்ப்பின் குத்துவது போன்ற காரியங்களை நீங்கள் பெருமைக்காக, அழகுக்காக செய்வீர்களானால் அது தவறு. தேவனுக்கு முன்பாக உங்கள் இருதயத்தை சோதித்துப் பாருங்கள். இவைகள் உங்கள் அணுகுமுறையைப் பொருத்தது. நீங்கள் செய்யும் இடத்தைப் பொருத்தது. உங்கள் நோக்கத்தைப் பொருத்தது.

89. ஒரு ஸ்திரீ தன் தலைமயிருக்குள், தலைமயிர் துண்டு வைத்துக்கொள்வதில் தவறு எதுவும் இல்லை. அவள் தன் தலைமயிரை அடர்த்தியாக்கிக் கொள்ள தன் தலைமயிருக்குள் தலைமயிர் துண்டு ஒன்றை வைக்கிறாள். அதில் தவறு ஒன்றும் இல்லை. (கே.ப. 408.) ஒரு ஸ்திரீக்கு தலைமயிர் போதுமான அளவுக்கு நீளமாக இல்லை என்றால், அவள் கவரிமயிரைப்போன்ற தலைமயிரை அத்துடன் இணைத்துக்கொள்ள விரும்பினால் அதை செய்யுங்கள். அதில் தவறு இல்லை. (கே.ப. 351.) தீர்க்கத்தரிசி தன் மனைவியின் தலைமயிர் மெலிந்துள்ளதாக இருப்பதால், ஏதோ வட்டமான ஒன்று உள்ளது, அவள் தன் தலைமயிரை அதில் சுற்றிக்கொண்டு கொண்டை ஊசிகளை குத்திக்கொள்கிறாள், அதில் தவறு இல்லை எனக் கூறுகிறார். (கே.ப.

408.) உங்களுக்கு தலைமயிர் இல்லாதிருந்து நீங்கள் டோப்பா அணியவிரும்பினால், அது சரிதான். ஆனால் மானிடரைப்போல் தோற்றம் அளிக்கும் ஒன்றை அணிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு தலைமயிர் இல்லாதிருப்பதினால் நீங்கள் அதைச் செய்வது இனிதாகும். (நான் ஏன் ஸ்தாபிக்கபட்ட மார்க்கத்துக்கு விரோதமானவன். (பத்தி 214.)

90. பெண்கள் தங்கள் தலைமயிரினால் குதிரைவால் கொண்டை போடுவது ஒரு வகை அலங்காரமே. ஒரு வேசி தன் தலைமயிரை வாரிக்கொள்வதற்கும், ஒரு ஆவிக்குரிய, குடும்பப்பெண் தன் தலைமயிரை வாரிக்கொள்வதற்கும் உள்ள வித்தியாசத்தை உங்களால் காணமுடியவில்லையா?. தன் தலைமயிரை சிங்காரித்த யெசபேலைப் போன்று நீங்கள் காணப்படலாகாது. 2 ராஜா 9:30. பற்பல விதமாக உங்கள் மயிரை அலங்கரிப்பதைக் காட்டிலும் நீங்கள் உங்களை அழகுபடுத்திக் காட்ட அதிகமான வேத வசனங்கள் உங்களுக்கு உண்டு. தேவனுடைய வார்த்தையினால் உங்களை அழகுபடுத்துங்கள். அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கும் குணமே உங்களுக்கு அலங்காரமாக இருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. 1பேது. 3:4. புறம்பான அலங்காரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் உங்களது உள்ளான அலங்காரத்துக்கு முக்கியத்துவம் கொடுங்கள். புறம்பான அலங்காரம் உலகப்பிரகாரமானது. உள்ளான அலங்காரம் ஆவிக்குரியது. ஒவ்வொரு பெண்ணும் தான் அழகாக இருக்க வேண்டும் என நினைப்பாள். இது சகஜம் தான். ஆனால் கிறிஸ்தவப் பெண்களாகிய நீங்கள் உலகத்திற்கு ஒத்த வேஷம் தரித்து உங்களை அலங்கரிக்காமல் எளிமையில் அலங்கரியுங்கள். ஒரு குடும்பத்தில் ஆகாரத்திற்கு ஆகும் செலவைவிட அலங்காரத்திற்காக வாங்கும் வஸ்துக்களின் செலவு பலமடங்கு அதிகமாயிருப்பது ஒரு வெட்கக்கேடான காரியம் ஆகும்.

91. பிறரை கவர்ச்சி செய்யக்கூடிய அளவுக்கு ஏதாவது ஒன்றை இயற்கை நிலையுடன் கூட்டுவது அலங்காரம். பெண்கள் எக்காரணத்தை கொண்டும் தங்களை அலங்கரிக்க கூடாது. (மறுரூபப்படுத்தும் தேவனுடைய வல்லமை பத்தி 120). முகத்தில் பல விதமான பவுடர்களை பூசி, கண்களுக்கு மையிட்டு, உதடுகளுக்கு சாயம் பூசி, கை நகங்களுக்கு வர்ணம் தீட்டி யெசபேலைபோன்று அலங்கரிக்கக் கூடாது. (கடைசி கால செய்தியாளன், பத்தி 285.) பெண்கள் தங்கள் உதடுகளுக்கும், முகத்துக்கும் சாயம் பூசிக்கொள்ளுதல் தவறு ஆகும். இது தவறு என்று பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார். (புறக்கணிக்கப்பட்ட ராஜா பத்தி 96.) அப்படியானால் திருமண வேளைகளிலும் கூட பெண்கள் தங்கள் தலைமயிரை சிங்காரித்து, பூ வைத்து, முகத்தில் சாயங்கள் பூசி, கண்களுக்கு மையிட்டு கொள்வது தவறு ஆகும் என்பதை பரிசுத்த ஆவியைப்பெற்ற ஒவ்வொருவரும் உணருவார்கள்.

92. தலைமயிருக்கு சாயம் பூசிக்கொள்ளக்கூடாது என்று கூறும் வேத வார்த்தையை காண்பிக்கமுடியாது (கே.ப. 279.) நீங்கள் இதை செய்ய வேண்டும் என்று மனதில் எண்ணம்கொண்டால், அது குறித்து வேதம் கூறுவதில் தலையிடாமல் வேதம் கூறுவதில் எந்த கேள்வியும் எழுப்பாமல் அது கர்த்தருடைய சித்தம் என்று நீங்கள் பூரணதிருப்தி அடைவீர்களானால் அதை செய்யும் முன் தேவனுக்கு முன்பாக உங்கள் இருதயத்தை சோதித்துப் பாருங்கள். அதை செய்யக் கூடாது என்று வேதவசனம் இல்லாமலிருந்து ஆவியானவர் உங்களை நடத்துவாராகில் அதைச்செய்யுங்கள். தலைமயிருக்கு சாயம் போடும் விஷயத்தில் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. எனக்குத் தெரிந்த வரையில் **என் சபையில் அந்த வழக்கம் கிடையாது.** (கே.ப. 250. பத்தி 170, கே.ப. 408.) உங்கள் தலைமயிருக்கு சாயம் பூசிக்கொண்டு சேற்றிலிருந்து எழுந்து வந்தது போல் தோற்றமளிக்காதீர்கள். உங்கள் தலைமயிருக்கு நிறம் இல்லாதிருந்து அதற்கு நிறம் பூசினால் அது பரவாயில்லை. (நான் ஏன் ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கத்துக்கு விரோதமானவன்?. பத்தி 214.)

93. ஒரு ஸ்திரீ தன் கால்களில் உள்ள மயிரை சவரம் பண்ணிகொள்வது குறித்து தீர்க்கதரிசி அதை உங்களிடமே விட்டு விடுகிறேன் என்கிறார். (கே.ப. 416.)

94. உங்களுக்கு விரல்களில் நகங்கள் இல்லாதிருந்தால் உண்மையான விரல் நகங்களை அணிந்து கொள்ளுங்கள். ஆனால் நகங்களை அழகுபடுத்த நகபாலிஷ் போடக்கூடாது.

95. கண்களில் மையிட்டுக் கொள்ளக்கூடாது. எரே. 4:30.

96. உங்களுக்கு பற்கள் இல்லாதிருந்தால் செயற்கையான பற்களை வாங்கி மாட்டிக்கொள்ளுங்கள் ஆனால் உங்கள் பற்கள் சற்று கோணலாக உள்ளது என்பதற்காக தேவனால் அளிக்கப்பட்ட அந்த நல்ல பற்களை பிடுங்கி விட்டு செயற்கையான பற்களை மாட்டிக் கொள்ளாதிருங்கள். (நான் ஏன் ஸ்தாபிக்கப்பட்ட மார்க்கத்துக்கு விரோதமானவன்?. பத்தி 214.)

97. கிறிஸ்தவ வாழ்க்கையில் மூன்று படிக்கட்டுகள் உண்டு. நீதிமானக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், பரிசுத்தஆவியின் அபிஷேகம். ஒரு பெண் உயரமான செருப்புக்களை (high heeled chappals) அணிந்து கொண்டே நீதிமானாக்கப்பட்டு, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக்கெள்ள முடியும் என கூறி ஓட ஆரம்பித்தாள், முடிவில் ஒரு மிகப்பெரிய நெருப்பில் விழுந்தாள் என தீர்க்கத்தரிசி தனது தாயார் கண்ட ஒரு சொப்பனத்தை ஏசா 3:16 வசனத்ததுடன் ஒப்பிட்டு உயர்ந்த செருப்புக்களை பெண்கள் அணியக்கூடாது என்கிறார். (இது சூரிய உதயம் பக்கம் 55–57.)

98. ஆபரணங்கள் எல்லாம் ஆப்பிரிக்கா நாட்டில் இருந்து வந்தன. கம்மல், வர்ணங்கள், நகைகள், நெக்லஸ், ஹாட்டென்ட்டாட் காட்டில் இருந்து வந்தன. அவைகள் அஞ்ஞானிகளின் ஆபரணங்கள் கிறிஸ்தவர்கள் அஞ்ஞானியாக இருக்க வேண்டும் என்று வேதாகம் கூறுவது இல்லை. (சபையும் அதன் நிலையும் பத்தி 136.) பெண்கள் பொன் ஆபரணங்களை அணிந்து புறம்பாக தங்களை அலங்கரிக்கக்கூடாது 1பேது.3:3.

1தீமோ.2:9. காதுகளில் கூட லோணாக்குகளை(ear rings) அணியக்கூடாது. (ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை பக்கம் 25. பத்தி 2&3.) காதணிகள் எதுவும் அணியக்கூடாது. (கடைசிகால செய்தியாளன் பத்தி 216.) இவைகள் யாவும் வீணாய் உன்னை அழகுபடுத்துவதாகும் எரே.4:30. பொதுவாக காதுகளில் கம்மல், கைகளில் வளையல், கழுத்தில் நெக்லஸ், கால்களில் கொளுசு, மூக்கில் மூக்குத்தி, கை விரல்களில் மோதிரங்கள் போன்ற பொன் ஆபரணங்களினால் ஒரு பெண் தன்னை புறம்பாக அலங்கரிக்கக் கூடாது. சிங்காரித்துக் கொள்ளக்கூடாது.

99. மெத்தடிஸ்ட்களாகிய நீங்கள் மூக்குத்திகளும், காதணிகளும் அணிகிறீர்கள், அவைகள் பிசாசின் பக்கசேனல்கள் போல் காட்சி அளிக்கின்றன. (சர்ப்பத்தின் வித்து பக்கம் 56.) கர்த்தரும் இஸ்ரவேல் புத்திரர்களிடம் உங்கள் ஆபரணங்களை கழற்றிப்போடுங்கள், அப்பொழுது நான் உங்களுக்குச் செய்யவேண்டியதை அறிவேன் என்று கூற, அவர்கள் ஒரேப் மலை அருகே தங்கள் ஆபரணங்களை கழற்றி பேட்டார்கள் எனக் காண்கிறோம். யாத். 33:5 & 6. ஆசீர்வாதத்திற்கு ஆபரணங்கள் தடையாக இருந்தன. கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினால் நாம் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் ஆபரணங்கள் தடையாகவே உள்ளன.

100. திருமணத்தில் ஆண், பெண்ணுக்கு மோதிரம் அல்லது தாலி அணிவது தவறு அல்ல. அது அத்தியாவசியமான ஒன்று ஆகும். இது விவாக சமயத்தில் கணவன் மனைவி மத்தியில் செய்யப்படும் உடன்படிக்கையை உறுதிப்படுத்த அணியப்படும் ஒரு அடையாளச்சின்னம் ஆகும். தாலி, மோதிரம் செய்த உடன்படிக்கைக்கு வெளிப்புற அடையாளமாய் இருக்கிறது. ஞானஸ்நானம் ஒரு வெளிப்புற அடையாளம். அவ்வாறாகவே கால்களைக் கழுவுதலும். இதை தீர்க்கதரிசி நீங்கள் அணிய வேண்டும் எனக் கூறுகிறார் If a woman wear a wedding ring a sign that she's married. In those days they did n't have wedding rings, they had a tablet, they put on their head. And that was a sign they were married woman (The Second comming of the Lord. page 55-63) தீர்க்கதரிசி சொல்லுவதை இன்று பல ஊழியக்காரர்கள் உதாசினப்படுத்துகிறார்கள். அது அவர்கள் யார் என்பதை நிரூபிக்கிறது.

101. வெளிப்புற அடையாளம் இல்லாத உடன்படிக்கை, உடன்படிக்கை ஆகாது, ஒப்பந்தம் ஆகாது. அவ்வாறாகவே செய்த உடன்படிக்கைக்கு அடையாளம் இன்றி வாழும் விவாகநிலை, விவாகத்தை தாறுமாறாக்குகிறதாகும். வேதாகமத்தில் அநேக நினைப்பூட்டும் உடன்படிக்கை, அடையாளங்களைக் குறித்து வாசிக்கிறோம். உதாரணமாக வானவில், ஆதி. 9:13. இரத்தம் யாத். 12:13 சிகப்பு நூல். யோசு 2:17 விருத்தசேதனம் ஆதி. 17:11. நீண்ட தலைமையிர் 1 கொரி. 11:10. இயேசு திருமணத்தில் செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக அணியும் தலைமாலையிலுள்ள வெள்ளிக்காசுகள் குறித்து பேசி அந்நாட்களில் திருமணத்தில் செய்த உடன்படிக்கைக்கு அடையாளமாக தலைமாலை இருந்தது என்பதை உறுதிப்படுத்துகிறார். தீர்க்கதரிசியும் ஒரு அடையாளம் தேவை என்கிறார். ஆனால் இன்று இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறோம் என்று கூறிக்கொண்டே களைகளை விதைப்பவர்கள் ஏவாள் தாலி அணியவில்லை, சாராள் கலியாண மோதிரம் அணியவில்லை, பத்சேபாள் தலைமாலை அணியவில்லை, ரெபெக்காள் மஞ்சள் கயிறு அணியவில்லை என வேதாந்தம் பேசிக்கொண்டே தங்கள் பாரம்பரிய பெந்தெகொஸ்தே ஸ்தாபன கோட்பாடுகளை, சுய நீதியை நிலை நிறுத்தப்பார்க்கிறார்கள்.

102. திருமண அடையாளம் மோதிரமாக இருக்க வேண்டும் அல்லது செயினாக இருக்க வேண்டும் என்பதல்ல. செயின் தங்கத்தில் அல்லது கருப்பு பாசிமணியில் அல்லது மஞ்சள் கயிற்றில் இருக்கவேண்டும் என்பது முக்கியம் அல்ல. நீங்கள் வசிக்கும் இடத்தில் உங்கள் சமுதாயத்தில் என்ன ஒழுங்குமுறை இருக்கிறதோ அதை கடைப்பிடித்து ஒரு அடையாளச் சின்னம் அணிந்துகொண்டால் போதும். ஆதியிலே திருமணத்திற்கு அடையாளம் இருந்ததா என தர்க்கம் செய்கிறவர்கள் ஆதியிலே இருந்த **வார்த்தை** இயேசு தலைமாலை குறித்து பேசுவதை அறியவேண்டும். லூக்.15:8 எதற்கெடுத்தாலும் ஆதி ஆதி என்றால் ஆதியில் சகோதரன் தன் சகோதரியை திருமணம் செய்தான் இன்று அவ்வாறு செய்யலாமா? ஆதியில் நடைமுறையில் இருந்த அநேக காரியங்களை நாம் இன்றும் பின்பற்றவேண்டுமே? இது சாத்தியமா?. முடியாதே!. ஆதியில் திருமண வேளையில் செய்யும் ஒப்பந்தத்திற்கு அடையாளம் இருந்தது. அது திருஷ்டாந்தமாக நமக்கு எழுதி வைக்கப்பட்டுள்ளது. In the Bible they wore wedding rings, only it was a tablet they called it என தீர்க்கத்தரசி திட்டவட்டமாக திருமண அடையாள சின்னம் குறித்து கூறுகிறார். (கே.ப. 283) தீர்க்கதரிசி அதைக் கடைப்பிடிக்க வேண்டும். என்பதால் அது முடிவு பெற்றுவிட்டது. இதைக்குறித்து இனித் தர்க்கம் தேவையில்லை.

103. ஒரு ஸ்திரீ ஏதாவது ஆபரணங்கள் அணிந்து இருந்தால் நாங்கள் அவளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க மாட்டோம் என்கிறார்கள் இது தவறு. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தன் பாவங்களுக்காக பாடுபட்டு, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்தெழுந்தார் என விசுவாசிக்கிறவர்கள் தங்கள் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கைக்கு அடையாளமாக ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறார்கள். அதற்கும் அந்த நபர் அணிந்துள்ள ஆபரணங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இதெல்லாம் அவர்களுடைய சுயநீதி. நமக்கு தேவனுடைய நீதி ஒன்றே தேவை. நாம் எதையும் சுய நீதியாக உற்பத்தி செய்ய வேண்டியதில்லை.

104. புருஷர்கள் ஆடைகளை ஸ்திரீகள் தரிக்கலாகாது. ஸ்திரீகள் புருஷர்கள் உடைகளை தரிக்கலாகாது. அப்படி செய்கிறவர்கள் எல்லாரும் உன் தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பானவர்கள் உபா. 22:5. தேவன் மனிதனை ஒரு விதமாகவும், ஸ்திரீயை மற்றொரு விதமாகவும் உருவாக்கினார், உடுத்தினார். ஆதலால் ஆண், பெண் ஒருவர் உடைகளை மற்றொருவர் அணியக்கூடாது.

105. பெண்களுக்கு உயர்ந்த வஸ்திரங்களை உடுத்துக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு அலங்காரம் இல்லை. 1 பேது.3:3. ஒரு பெண் உயர்ந்த ஆடம்பரமான ஆடைகளை உடுத்துக்கொள்ளுவதால் ஆண்களை தன்பக்கம் கவர்ச்சி செய்கிறாள். அது அவனை மாம்ச இச்சைக்கு உட்படுத்துகிறது. அவன் அவளோடு தன் இருதயத்தில் விபச்சாரம் செய்கிறான். நியாயத்தீர்ப்பு நாளில் அவள் அநேக ஆண்களை தன் கவர்ச்சியினால் மாம்ச இச்சைக்கு உட்படுத்தின செய்கைக்காக கணக்கு ஒப்புவிக்க வேண்டும். இவ்வாறாக தன்னை அலங்கரிக்கும் ஸ்திரீ ஆண்களிடம் ஆசையையும், மோகத்தையும், இச்சையையும், தூண்ட சாத்தானின் கரங்களில் ஒரு கருவியாக இருக்கிறாள்.பெண்கள் ஆடம்பரமான உடைகளை அணிந்து கொண்டு தங்களை கவர்ச்சியுள்ளவர்களாக காண்பித்து ஆண்களை இச்சைகளுக்குட்படுத்துவதால் அவள் விபச்சாரம் செய்வதற்காக பதில் சொல்ல வேண்டும். ஸ்திரீகளே, நீங்கள் சாராளைப் போன்று இருங்கள். அவள் சாதாரண வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு தன் புருஷனுக்கு உண்மையும் உத்தமுமாக வாழ்ந்து அவனை ஆண்டவன் என்று அழைத்தாள். நீங்களும் அவ்வாறே நடந்து கொண்டு உங்கள் கணவனை ஆண்டவன் என்று அழையுங்கள்.

106. இச்சை என்னும் சக்தியின் மூலம் ஏவாள் ஆதாமை பாவத்தில் விழவைக்க சாத்தான் அவளை உபயோகித்தான். இன்றைக்கும் இதே சம்பவிக்கிறது. பெண்கள் மயிரை கத்தரித்து, முகங்களில் வர்ணம் பூசி, கவர்ச்சியான ஆடைகளை அணிந்து காணப்படுகின்றனர். இவை ஒவ்வென்றும் தேவனுடைய வார்த்தைக்கு முரண்பாடானது என்பதை அவள் அறியாமல் இருக்கிறாள். மயிரை கத்தரித்தல் அவளை கனவீனமான ஸ்திரீயாக்கும். அது அவளை ஒரு வேசியாக மாற்றுகிறது. அவர்கள் கால் சட்டை அணிதல் அவளை அவமதிப்புக்குள்ளாக்குகிறது. ஆனால் அவள் அதை அறியாமல் இருக்கிறாள். அவள் அறியாமல் இருப்பது தேவனுடைய பரிசுத்தத்தைப் பெற்றிருப்பதினால் அல்ல, மாறாக சாத்தனின் இச்சையைக் கொண்டிருப்பதினால் (சாத்தானின் ஏதேன் பக்கம் 32.)

107. பெண்கள் தலைமயிரை கத்தரித்துக்கொள்ளுதல் தவறு என பரிசுத்த ஆவி உரைக்கிறார். நமது ஸ்திரீகள் குட்டை கால்சட்டை (Shorts) தளர்ந்த கால்சட்டைகள் (Slacks) அணிவதும் தவறு என பரிசுத்த ஆவியானவர் கூறுகிறார். (புறக்கணிக்கப்பட்ட ராஜா, பத்தி 96.)

108. பெண்கள் தங்கள் உள்ளாடைகள் வெளியே தெரியுமாறு குட்டையான வெளி ஆடைகளை உடுத்திக்கொள்ள கூடாது. சரீர அவயவங்கள் வெளியே தெரியும் அளவுக்கு மெல்லியதான ஆடைகளை அணியக்கூடாது. இந்நாட்களில் பெண்களின் ஆடைகளை கவனித்தால் அவர்கள் போட்டிருக்கும் சட்டை மிக மெல்லிய துணியிலானதாக இருப்பதினால் அவர்கள் சட்டைக்குள் அணிந்திருக்கும் பிரா (Bra) நன்றாக வெளியே தெரிகிறது. அதோடு மட்டுமல்ல அவர்களுடைய ஸ்தனங்கள் பக்கவாட்டில் வெளியே நன்றாக தெரிகின்றன. சேலை மிக மிக மெல்லியதாக இருப்பதால் உள்பாவாடை கூட வெளியே நன்றாகத் தெரிகிறது. தேவன் இவைகளை கடிந்து கொள்கிறார். பெண்கள் ஸ்கட் (Skirt) அணிந்தால் முழங்கால்களுக்கு நான்கு அல்லது ஐந்து அங்குலம் தாழ்வாக இருக்க வேண்டும். (ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை, பக்கம் 25, பத்தி 2&3.)

109. பெண்கள் தங்கள் சரீரத்தோடு முற்றிலுமாக ஒட்டிக்கொள்ளும் அளவுக்கு இறுக்கமான ஆடைகளை அணியக்கூடாது (கே.ப. 244.) அவலட்சணமான, இருக்கமான ஆடைகளை அணியக்கூடாது. (ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை. பக்கம் 44 பத்தி–3.) பாலுணர்ச்சியைத் தூண்டும் விதத்தில் கவர்ச்சியான ஆடைகளை அணியக்கூடாது. உன் முன்பக்கமும், பின்பக்கமும், வெளியே தள்ளி உன் அவயவங்களின் ஒவ்வொரு அமைப்பும் வெளியே தெரியும் வண்ணம் இறுக்கமான ஆடைகளை அணியக்கூடாது. ஏனென்றால் நீங்கள் கவர்ச்சியான உடல் அமைப்பை பெற்றுள்ளீர்கள். ஆண்களுடைய உடல் அமைப்பில் கவர்ச்சி இல்லை. அவன் அரை அம்மணமாக நடுத்தெருவில் திரிந்தாலும் அதில் கவர்ச்சி எதுவும் இல்லை. ஸ்திரீகள் இறுக்கமான உடைகளை அணிந்து கொண்டு தங்களை கவர்ச்சியாக காண்பிக்கும் போது அவள் விபச்சாரம் செய்ததற்காக தேவனுக்கு பதில் சொல்ல வேண்டும். (கே.ப 2:20 பத்தி 15.) ஆதலால் பெண்கள் நேர்த்தியான ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும்.

110. பெண்கள் சுடிதார் என்னும் ஆடையை அணியலாம். பொதுவாக சுடிதார் ஆடையில் மூன்று பாகங்கள் உண்டு. ஒரு பேண்ட், ஒரு டாப்ஸ், ஒரு சால்வை இந்த மூன்று பாகங்களையும் சேர்ந்து ஆடையாக அணிந்து கொள்வது நல்லது. சிலர் டாப்ஸ் மேல் சால்வை அணிவதில்லை. ஆதலால் அது அவர்கள் மார்பகங்களை காட்டுகிறது. அது ஆண்களின் உணர்ச்சியை தூண்டும் வண்ணமாக உள்ளது. ஆதலால் சுடிதார் அணிபவர்கள் டாப்ஸ் மேல் சால்வை எவ்பொழுதும் போட்டுக்கொள்ள வேண்டும். இந்த ஆடையை நீங்கள் சபை ஆராதனை வேளை, ஞானஸ்நானம் சமயம், எங்கும் எப்பொழுதும் அணிந்து கொள்ளலாம். இதில் தவறு எதுவும் இல்லை. இதிலும் இறுக்கமான ஆடைகளை அணியக்கூடாது. இது நமது நாட்டில் வடமாநிலங்களில் வசிக்கும் பெண்களின் ஆடையாக இருக்கிறது. இந்த ஆடையை குற்றப்படுத்த வேதவசனங்கள் எதுவும் இல்லை.

111. தீர்க்கதரிசி மணவாட்டி அணிவகுப்பைப் பார்க்கும் போது பலவிதமான ஆடைகளை அணிந்த பெண்களைக் கண்டார். அது அவர்கள் பற்பல நாடுகளை சேர்ந்தவர்கள் என்பதை எடுத்துக்காட்டியது. என்னை பொறுத்த அளவில் தமிழ்நாட்டில் பெண்கள் அணியும் சேலையை விட சுடிதார் ஆடை பல வகையில் சிறந்தது. ஆனாலும் அதிலும் சில குறைபாடுகள் உண்டு, அதை மறுப்பதற்கு அல்ல. சுடிதார் அணியும் போது ஒரு பெண் தன் சரீரம் முழுவதையும் ஆடையினால் மூடிக்கொள்கிறாள். ஆனால் சேலை உடுக்கும் போது ஒரு பெண்ணின் வயிற்றுப்பகுதி, முதுகுப்பகுதி, இடுப்புபகுதிகள் அரை அம்மணமாக வெளியே தெரிகிறது. அது ஆண்களின் உணர்ச்சியை தூண்டுவதாக அமைகிறது. அதிலும் சில பெண்கள் தங்கள் தொப்புள் கீழ் சேலைக்கட்டுகிறார்கள். இந்தக் கண்ராவியை என்ன என்று சொல்வது? பெண்கள்

சேலைக்கட்டுவதினால் அதிக கேடுகள் தான் உள்ளது. இத்தனை கேடுகள் சுடிதார் அணிவதில் இல்லை. மேலும் சுடிதார் ஒரு பொருளாதார சிக்கன ஆடையாகும்.

112. உங்களுடைய சட்டை கைகளின் நீளம் இவ்வளவு இருக்கவேண்டும் என்று தேவன் ஒரு குறிப்பிட்ட நீளத்தை நிர்ணயிக்கவில்லை (கே.ப.279.) நீ ஞானம் உள்ளவளாகவும், மதிக்கத்தக்கவளாகவும், சுத்தமாகவும் காட்சி அளித்தால் அது போதும். சில வாரங்களுக்கு முன்பு நான் ஒரு தரிசனம் கண்டேன். நான் உயர்ந்த இடத்தில் நின்று கொண்டு இருந்தேன் **அப்பொழுது சபையின் மாதிரி காட்சியை காண்பதற்காக அழைக்கப்பட்டேன் அழகான ஒரு பெண்கூட்டம் நன்றாக உடுத்தி நீண்ட தலைமயிரை பின்பக்கம் கொண்டை இட்டுக்கொண்டு, நீண்ட கை ஆடை அணிந்து, பாவாடை முழங்கால் வரைக்கும் தொங்கி கொண்டு இருந்ததாக தீர்க்கத்தரிசி கூறுகிறார்.** (மணவாட்டியை முன் குறித்தல். பக்கம் 48.) ஆதலால் பெண்களின் சட்டை கை நீளமாக இருப்பது சிறந்தது.

113. ஒரு முறை ஒரு பெண் நான் குட்டை ஆடை (Shorts) அணிவது இல்லை என்றாள். தீர்க்கதரிசி நான் அதற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன் என்றார். அதன் பின் அவள் நான் சிலக்ஸ் (Slacks) அணிந்து வருகிறேன் என்றாள். சிலக்ஸ் (Slacks) என்பது அரைக்கால் சட்டை (Trousers). நாம் நம் நாட்டு ஆண் பெண் இரு பாலினரும் இப்படிபட்டதான அரைக்கால் சட்டை அணிவதைப் பார்த்திருக்கிறேன். தீர்க்கதரிசி இப்படிப்பட்ட ஆடை அணிவதை படும் மோசம் என்கிறார். அதாவது பெண்கள் குட்டை ஆடை அணிவதை விட அரைக்கால் சட்டை அணிவது மிக மட்ட ரகம் என்கிறார். (Things that are to be பத்தி 97 & 98).

114. ஆண்கள் அணியும் Overalls என்ற மேலே போர்த்திக் கொள்ளும் ஆடையை பெண்கள் அணியக்கூடாது என தீர்க்கத்தரிசி Wy are we not a denomination என்ற செய்தியில் 245வது பக்கத்தில் இவ்வாறு கூறுகிறார். And When you take a woman, wants to chop her hair and wear a pair of overalls and get out there "and bless God, I tell you", there is something wrong. இதைத் தமிழில் அதுபோல் பெண்கள் தலைமயிரைக் கத்தரித்துக் கொண்டு, ஆண்களின் உடையை அணிந்து செல்லும் ஒரு பெண்ணை எடுத்துக்கொண்டால் நான் சொல்லுகிறேன், அவளில் ஏதோ தவறு உள்ளது என அரைகுறையாக வழக்கம்போல் WBGNSயினர் மொழி பெயர்த்துள்ளார்கள். Overalls நைட்டி அல்ல. WBGNSல் ஆவிக்குரியவர்களை காண்பது அரிதாயிருக்கிறது. இவர்கள் எவ்வளவுதான் செய்தியை கூட்டியும், குறைத்தும், தவறுகளை நுழைக்கும் தாறுமாறாக மொழி பெயர்த்தாலும் அது தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்க முடியவே முடியாது அல்லேலூயா.

115. பெண்கள் அரைக்கால் சட்டை அணிதல், வர்ணம் தீட்டிக்கொள்ளுதல் போன்றவை தேவனுடைய வார்த்தைக்கு முரணானதாகும். அரைக்கால் சட்டைக்கும் ஸ்திரீக்கும் என்ன சம்பந்தம் உள்ளது ?. ஒதுக்கப்பட்ட கனியை புசித்தல் அல்லது புசியாதிருத்தல் என்ற காரியத்தில் ஏவாள் தீர்மானம் செய்ய வேண்டிதிருந்தது போல் இது இருக்கிறது. தேவன் அதை செய்யவேண்டாம் என்று கூறினார். அவளோ அதைச் செய்தாள். அவளுடைய கிரியைகள் அவள் தேவனை வெறுப்பதை நிரூபித்தன. ஆனால் அவள் தேவனை நேசிப்பதாக கூறிக்கொண்டு சாத்தானிலே அன்பு கூறினாள். அவள் இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய நவீன நாகரிகத்தின் தேவனை தொழுதுகொள்கிறாள். (இப்பொல்லாத காலத்தின் தேவன். பத்தி 91 & 92.)

116. பெண்கள் நைட்டி அணிவதில் தவறு கிடையாது. அது அவளுடைய சரீரத்தை முற்றிலுமாக மறைப்பதால் அது தவறு என கூறமுடியாது. ஆதியில் பெண்கள் அங்கிகள் தான் அணிந்திருந்தனர். (கே.ப.251.) என்னை பொறுத்த அளவில் அவள் நீதிக்கு புறம்பான ஆடைகளை உடுத்திக்கொள்ள வேண்டாம். பொதுவாக பெண்கள் வீட்டில் நைட்டி அணிகிறார்கள். யாராவது அந்நியர் வீட்டிற்கு வந்தால் உடனே தங்கள் மார்பகங்கள் மீது டவல் ஒன்றை போட்டுக் கொள்கிறார்கள். பாருங்கள், அதுதான் பண்புள்ள பெண்களின் நடத்தை. இந்த ஆடை குறித்து இதை அணிந்து கொள்வது நலம் என்று கருதுகிறேன் என்கிறார் தீர்க்கதரிசி. (கே.ப. 367.)

117. சகோ. பிரன்காமே, கிறிஸ்தவ சகோதரிகளாக நாங்கள் நைலானிலேயும் (Nylon) டெக்ரானிலேயும் (Dacrons) சட்டை போட்டுக்கொண்டால் என்ன ? போட்டுக்கொள்ளலாமா ?. நான் சகோதரியே பார், நீ உன் மனதில் இருக்கிறதை நன்றாய் அறிந்திருக்கிறாய். உன் செய்கையும் உன் நடத்தையும் உன்னில் என்ன இருக்கிறது என்று தெரிவிக்கிறன. கற்புடன் உடை உடுத்த கடைகளில் விற்கவில்லையானால் நீ தேவையானதை தைத்து உடுத்தலாம் அல்லவா ?. தையல் மெஷின்களும் விற்கப்படுகின்றனவே, தைத்துக்கொள்கிறார்களே. உன் சரீரத்தை மூடிக்கொள்ள அடக்கமுள்ள ஆடைகளை உடுத்திக்கொள்ளளாமே. நீ அரை அம்மணமாக ஏன் உடுத்திக்கொள்ள வேண்டும் ?. (சபையும் அதன் நிலையும். பத்தி 141. 142,) வேதம் எளிமையான ஆடை அணிந்து கொள்ள வழிகாட்டுகிறது. ஆடம்பரமான அணிவது குறித்து எச்சரிக்கிறது.

118. பெண்கள் ஆண்கள் முன் நின்று கொண்டு ஆடைகளை அணியக்கூடாது. பெண்கள் ஆண்கள் முன் நின்று குளிக்கக் கூடாது. பொதுவாக பெண்கள் ஆண்கள் முன் அரைகுறை ஆடைகளில் தோற்றம் அளிக்கக்கூடாது.

119. ஒரு வேளை நம்முடைய பெண்களுடைய பழைய நகாரிகத்தையும், நடை உடை பாவணைகளையும் குறித்து இவர்கள் மூடநம்பிக்கை உள்ளவர்கள் என்று கூறி மக்கள் ஏளனம் செய்தாலும் பரவாயில்லை, நாம் நல்ல பெண்மணிகளை போல் நடந்து கொள்வோம். ஆடைகளை உடுத்துவோம். வாழ்ந்து காட்டுவோம்.

120. ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கம் உள்ளவளாயிருந்து அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள். உபதேசம் பண்ணவும், புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறது இல்லை. அவள் அமைதலாக இருக்க வேண்டும். எண்ணத்திலெனில் முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான்

பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். மேலும் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள். 1 தீமோ 2:11 – 14. சபையில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள். பேசும்படி அவர்களுக்கு உத்திரவு இல்லை. அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும். வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தை கற்றுக்கொள்ள விரும்பினால் வீட்டிலே தங்கள் புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள். ஸ்திரீயானவள் சபையிலே போதிக்கிறது அயோக்கியமாய் இருக்குமே. (1கொரி. 14:34&35) ஸ்திரீயானவள் புருஷனுக்காக உருவாக்கப்பட்டாள். அவள் புருஷனின் ஒரு பாகமாக இருக்கிறாள். ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. ஸ்திரீயானவளே, வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள். ஆதலால் கர்த்தர் அவளை அவள் புருஷன் ஆண்டு கொள்ளும்படி செய்தார். இப்படியிருக்க, ஒரு ஸ்திரீ புருஷன் மீது எப்படி அதிகாரம் செலுத்த முடியும்?. ஆதலால் தான் தேவன் அவள் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கக்கூடாது, தேவனுடைய வார்த்தையைக் கொண்டு புருஷர்கள் மீது எந்தவிதமான அதிகாரமோ செலுத்தக்கூடாது என்று கூறினார்.

121. கொரிந்தியர், அந்நாட்களில் தியானாள் என்ற ஒரு ரோம பெண் தெய்வத்தை வழிபட்டு வந்தனர். அந்த தெய்வம் பெண்ணாக இருந்ததால் அவளுக்கு அநேக பெண் ஊழியக்காரிகள் இருந்தனர். இந்த ஊழியக்காரிகள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபின் தியானாளுக்கு பூசாரியாக இருந்தது போலவே, இங்கும் ஊழியத்தை தொடர்ந்து செய்ய நினைத்தார்கள். ஆனால் தேவன் ஒரு ஸ்திரீ அல்ல. ஸ்திரீ ஒரு உபபொருள். மனிதன் ஸ்திரீக்காக உண்டாக்கப்படவில்லை. மாறாக ஸ்திரீயே மனுஷனுக்காக உண்டாக்கப்பட்டாள். மானிடவர்க்கம் முழுவதும் விழுந்துபோவதற்கு அவள் காரணமாய் இருந்தாள். அவளே வீழ்ச்சிக்கு காரணம். ஆதலால் தேவனுடைய சபையில் ஸ்திரீ பிரசங்கம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. உபதேசம் பண்ணவும் புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறது இல்லை, அவள் அமைதலாக இருக்க வேண்டும் என்கிறான் பவுல். 1தீமோ. 2:15.

122. திறமையான பெண் பிரசங்கிகள் உண்டு. அதை யாரும் மறுக்க முடியாது. அவர்கள் நன்றாக பிரசிங்கிக்க முடியும். ஆண்களை விடவும் நன்றாக பிரசிங்கிக்க முடியும். பாருங்கள் நான் ஒரு மனிதனை என் துப்பாக்கியால் சுட்டுகொலை செய்யமுடியும். ஆனால் அதை செய்ய நான் துணிவுகொள்ள மாட்டேன். அதுபோலத்தான் பெண்களால் நன்றாக பிரசங்கிக்க முடியும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யக்கூடாது. அவள் பிரசங்கித்தால் மனிதன் மேல் அதிகாரம் செலுத்துகிறவளாகிவிடுவாள். ஏனெனில் ராஜாவின் வார்த்தை எங்கோ அங்கு அதிகாரம் உண்டு பிர. 8:4 புருஷன் மேல் அதிகாரம் செலுத்த ஸ்திரியானவளுக்கு உத்தரவு இல்லை 1தீமோ. 2,12. சபையில் உங்கள் ஸ்திரீகள் பேசாமல் இருக்கக்கடவர்கள். பேசும்படிக்கு அவர்களுக்கு உத்தரவு இல்லை. அவர்கள் அமைதலாயிருக்க வேண்டும். வேதமும் அப்படியே சொல்லுகிறது. முன்பிருந்த நாட்களில் நியாயப்பிரமாணம் ஸ்திரீகளை போதகர்களாக அனுமதிக்கவில்லை. நியாயப்பிரமாணம் தமிழில் வேதம் என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. (கே.ப. 155)

123. ஆதாமுக்கு தன் மனைவியை தெரிந்துகொள்ள வேண்டும். என்ற அவசியம் இருக்கவில்லை. அவன் தன் மணவாட்டியை தெரிந்துகொள்ளவில்லை. தேவன் ஒருத்தியை அவனுக்காக உண்டாக்கினார். எனவே அவனுக்கு தெரிந்துகொள்ள வேறுயாருமே இல்லை. அவள் அவனை தேவனுடைய வார்த்தையில் இருந்து விலகச்செய்தாள். அவள் அவனை தேவனுடைய சித்தத்திலிருந்து விலகச்செய்து, அவன் செய்யக்கூடாத ஒன்றை செய்ய காரணமாய் இருந்து அதன் முலம் மானிடவர்க்கம் முழுவதற்கும் மரணத்தை கொண்டுவந்தாள். ஆதலால் தான் ஒரு பெண் போதிக்கவோ, பிரசங்கம் செய்யவோ, தேவனுடைய வார்த்தையை எந்தவிதத்திலும் கையாளவோகூடாது என்று வேதம் அவளுக்கு தடைவிதித்துள்ளது. சகோதரியே உங்களில் அனேகர் பிரசங்கம் செய்வதற்கு தேவன் என்னை அழைத்திருக்கிறார் என்று கூறுகிறீர்கள். நான் உங்களுடன் வாதாடப்போவதில்லை. ஆனால் நீங்கள் அப்படி செய்யக்கூடாது என்று தேவனுடைய வார்த்தை உரைக்கிறது. அவள் உபதேசம் பண்ணவும், அதிகாரம் செலுத்தவும் கூடாது. அவள் அமைதலாயிருக்க வேண்டும். நான் அப்படி செய்ய கர்த்தர் என்னிடம் கூறினார் என்று நிங்கள் சொல்லுகிறீர்கள். நான் அதை துளிகூட சந்தேகிக்கவில்லை. பிலேயாம் முதலில் தேவனுடைய திட்டவட்டமான தீர்மானத்தை பெற்றான், அதை செய்யாதே என்று. அதன் பின்பும் அவன் அதில் நிலைத்திற்க விரும்பாத காரணத்தினால் முடிவில் அவன் சென்று அதை செய்யும்படி கூறினார். தேவன் ஒருவேளை உங்களை பிரசகிங்க அனுமதிக்கலாம். ஆனால் அது மூலவார்த்தையின்படியும், திட்டத்தின்படியும் அமைந்திருக்கவில்லை. (மணவாட்டியை தெரிந்துகொள்ளுதல். பக்கம் 32&33.)

124. ரோமர் 16:1, கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய பெபேயாளை குறித்து என்ன?. அவள் சரக்குகளை விற்பவள். ஸ்திரீகள் சபையில் அமைதியாய் இருக்க வேண்டும் என்று பவுல் கூறி அவர்கள் பேசுகிறதற்கு அனுமதி கொடுக்காமல், உடனே மறுபக்கம் திரும்பி, சுவிஷேத்தில் எனக்கு ஆதரவாயிருக்கிற பெபேயாள் சில இரவுகள் பிரசங்கம் செய்வாள் என்று கூறியிருப்பான் என்று நினைக்கிறீர்களா?. அப்படியானால் அவன் தான் கூறின வார்த்தைக்கே முறணாக செயல்பட்டதாக ஆகிவிடும்.

125. தெபொராள் குறித்து என்ன?. அவள் பெண் நியாதிபதி. அது அரசியல், சபையல்ல. இஸ்ரவேல் புத்திரர் அவளிடத்தில் நியாயவிசாரணைக்குப் போவார்கள். நியா. 4:4&5 அரசியலுக்கும் சபைக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. ஆனால் அரசியலைப்பார்த்து சபையின் நிலையையும், சபையை பார்த்து அரசியலின் நிலையையும் நாம் புரிந்து கொள்ளலாம். ஒரு பிரதான பெண் ஆசாரியனை நீங்கள் கண்டதில்லை. ஒரு பெண் ஆசாரியனையும் நீங்கள் கண்டதில்லை வேதத்தில் எங்குமே கூறப்படவில்லை ஒரு பெண் பிரசங்கியை நீங்கள் வேதத்தில் காண முடியாது. ஆனால் கள்ளச்சபையாகிய தென்இந்திய திருச்சபையைச் சார்ந்த ராயலஷீமா டயோசீஷனில் எஸ். ஜெயம்மா (S. Jayamma) 31 வயது, மற்றும் ஐ.எம்.என். ஜோதி (I.M.N. Jothi) 27 வயது என்ற இரு திருமணம் ஆகாத பெண்கள் குருமார்களாக 17–7–1983ல் டியோசீஷன் பிஷப் எல்.வி. அசரியா என்பவரால் நியமிக்கப்பட்டார்கள். மேலும் டோரதி எம்.கில் (Dorathy M.Hill) மேடக் டயோசீஷனில் 19–6–

1983ல் குருவானராக அதன் பிஷப் வி. பிரேம் சாகர் (V. Prem Sagar) என்பவரால் நியமிக்கப்பட்டாள். இந்த நியமணங்கள் யாவும் தேவதூஷணம் ஆகும். ஏனென்றால் பெண்களுக்கு ஆசாரியத்துவப்பணி செய்ய உரிமை கிடையாது. ஆசாரித்துவ பணி செய்த பெண்ணை நீங்கள் வேதத்தில் எங்கும் காண முடியாது.

126. ஒரு ஸ்திரீக்கு அரசியலில் எந்த வேலையும் கிடையாது. அவளுக்கு சபையில் எந்த வேலையோ, அதிகாரமோ கிடையாது. அவளுக்குள்ள இடம் மனிதனின் ராணி என்னும் முறையில் வீடு மாத்திரமே. அதற்கு வெளியில் அவளுக்கு ஒன்றுமே இல்லையே (இதை அறியாமல் இருக்கிறாய். பக்கம் 16–18)

127. ஒரு ஆணைக்காட்டிலும் ஒரு பெண்ணை சாத்தான் ஆயிரக்கனக்கான முறை வேகமாக வஞ்சிக்கமுடியும். ஏவாள் உத்தமமாகவும், உண்மையாகவும் இருந்தாள். ஆயினும் அவள் வஞ்சிக்கப்பட்டாள். ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை. போதகர்கள் பெண்பிரசங்கிகளை அபிஷேகித்து சபையில் போதகர்களாக நியமிக்கின்றனர். ஆனால் வேதமோ ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம் முடிய அதை கண்டிக்கிறது. (புத்திர சுவிகாரம், பாகம் 4 பத்தி 135) பெண்கள் போதிக்ககூடாது (Teach), பெண்கள் பிரசங்கிக்ககூடாது (Preach).

128. அப்பொல்லோ விஷயத்தில் ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் இணைந்து அவனுக்கு தேவனுடைய மார்க்கத்தை அதிய திட்டமாய் விவரித்து கான்பித்தார்கள் என அப் 18:26ல் வாசிக்கிறோம். இதிலிருந்து தேவனுடைய மார்க்கத்தை ஒருவனுக்கு விவரித்து காண்பிப்பதில் கணவனுடன் மனைவியும் பங்கு கொண்டு கணவனுக்கு ஒத்தாசையாக இருந்தாள் எனத் தெரிகிறது.

129. பெண்கள் தாங்கள் ஏதேட்சையாக சந்திக்கும் பெண்களுக்கு அல்லது தங்கள் வீட்டுக்கு வரும் பெண்களுக்கு அல்லது பெண்கள் கூடும் இடங்களில் பெண்களுக்கு தேவனுடைய மார்க்கத்தை விவரித்து காண்பிக்கலாம். தங்களால் விவரிக்கமுடியாத நிலையில் தங்கள் பாஸ்டரை அணுகும்படி கூறலாம். ஆனால் ஆண்கள் மத்தியில் அதை செய்யக்கூடாது. பெண்கள் மத்தியில் அவர்கள் இந்த ஊழியத்தை செய்யலாம். அவர்கள் ஆண்கள் மத்தியில் அதை செய்தால் அவர்கள் மீது அதிகாரம் செலுத்துவதாகிவிடும்.

130. விசுவாசத்தில் ஒரு மனப்பட்டவர்களாய் ஆண்களும் பெண்களும் ஒன்றாக கூடி தேவனை ஆராதிக்கலாலம், துதிக்கலாம், ஜெபிக்கலாம், உபவாசிக்கலாம், பெண்கள் ஆவிக்குரிய வரங்களை வெளிப்படுத்தி சபையில் திர்க்கதரிசனம் உரைக்கலாம், அவர்கள் சபையில் வேதவாசிப்பு, சங்கீதப் பகுதிகளில் பங்குகொள்ளலாம், கிறிஸ்துவைப் பின் தொடர்ந்து அவருக்கு ஸ்திரீகள் ஊழியம் செய்தது போன்று ஊழியர்களுக்கு அவர்கள் உதவியாக இருக்கலாம். பெண்கள் மத்தியில் பெண்கள் ஊழியம் செய்யலாம். கர்த்தர் தனக்கு செய்ததை குறித்து சபையில் சாட்சிக்கொடுக்கலாம். ஸ்திரீகள், வீட்டுப் பெண்மணிகள் – நீங்கள் வேறொருவர் வீட்டில் வேலைக்காரியாயிருந்தாலும் சாட்சி கூறுங்கள். தேவனுடைய இராஜ்யத்திற்கென்று உங்களாலான எல்லாவற்றையும் செய்யுங்கள். (வேறொருவரால் விளையும் பாதிப்பு. பத்.72) கிறிஸ்துவுக்காக பாடுகளை அனுபவிக்கலாம், ஆவிக்குரிய வரங்களை வெளிப்படுத்தி, அற்புத அடையாளங்களைச் செய்யலாம், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தலாம், ஆனால் ஆண்கள் மத்தியில் தேவனுடைய வார்த்தையை எடுத்து போதிக்க, உபதேசிக்க, புருஷன்மேல் அதிகாரம் செலுத்த முடியாது 1கொரி. 14:34, 1தீமோ. 2:12–14. ஏனென்றால் அவள் மனிதனின் ஒரு பாகமாக இருக்கிறாள். சபையில் பெண்கள் ஜெபிக்கலாம், தீர்க்கதரிசனம் உரைக்கலாம், அந்நிய பாஷையில் பேசலாம், அந்நியபாஷைக்கு வியாக்கியானம் பண்ணலாம், அவர்கள் ஆவிக்குரிய வரங்களை வெளிப்படுத்தலாம். ஆனால் பிரசங்கிக்க, போதிக்க மட்டும் அவர்களுக்கு உத்தரவு இல்லை. சபையில் பெண்கள் ஸ்தானங்களை வகிக்கவும், போதகர்களாயிருக்கவும் தடைசெய்யப்படுகிறார்கள். (இயேசுகிறிஸ்துவைப்பற்றிய வெளிப்படுத்தல். பக்கம் 121, பத்தி 50)

131. சுவிசேஷ ஊழியம் என்ற பெயரில் பெண்கள் வீடுவீடாய் சுற்றித்திரியக்கூடாது. 1.தீமோ.5:13, ஏரே.14:10.

132. முதிர்வயதுள்ள ஸ்திரீகள் பாலிய ஸ்திரிகளுக்கு நற்காரியங்களைப் போதிக்கலாம். தீத் 2:4&5. பெண்களுக்கு ஆசாரியத்துவப் பணி செய்ய உரிமை கிடையாது.

133. தேவனுடைய நாமத்திற்கு மகிமையாக பெண்கள் கூட்டங்களில் சாட்சி கொடுக்கலாம். (ஒர் பரிபூரண மனிதனின் வளர்ச்சி, பக்கம் 12.)

134. மாற்க் என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டில் அநேகர் கூடி ஜெபம் பண்ணிகொண்டிருந்தார்கள். அப். 12:12 இதிலிருந்து பெண்கள் ஜெபத்தில் முக்கிய பங்கு வகித்தார்கள் எனத் தெரிகிறது. அன்னாள் கர்த்தருடைய சந்நிதியில் வெகுநேரம் விண்ணப்பம் பண்ணினாள். அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது. சத்தமோ கேட்கப்படவில்லை. அவள் கர்த்தருடைய சந்நிதியில் தன் இருதயத்தை ஊற்றினாள். 1. சாமு. 1:12–15. அவ்வாறாகவே நீங்களும் உங்கள் இருதயத்தை தேவனிடத்தில் ஊற்றுங்கள்.

135. பிலிப் என்னும் சுவிசேஷகனுடைய நான்கு குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுகிறவர்ளாக இருந்தார்கள் அப். 21:8&9. ஸ்திரீகள் தீர்க்கதரிசினிகளாக இருக்கலாம். நிச்சயமாக. ஆனால் அவர்கள் மேடை மேல் நின்றுகொண்டு போதகர்களாக இருக்க முடியாது. பாருங்கள், உங்கள் குமாரரும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லுவார்கள் அவர்கள் முன்னுரைப்பவர்கள் அல்லது சாட்சி சொல்லுபவர்கள் என்று பொருள். ( நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல பத்தி 178).

136. சகோதரர்களோடே கூட ஸ்திரீகளும் ஒருமனப்பட்டு ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள் அப் 1:18. போதிக்கவும், பிரசிங்கிக்கவும், மனுஷர் மேல் அதிகாரம் செலுத்தும் காரியங்கள் தவிர இதர சபை

காரியங்களில் பெண்கள் கலந்து கொள்ளலாம். அந்தியோகியா பட்டணத்தில் உள்ள சபையிலே கர்த்தருக்கு ஆராதனை செய்து உபவாசித்துக்கொண்டிருந்தார்கள் அப் 13:12. சபை என்றால் அங்கு ஆண்களும் பெண்களும் உண்டு. ஆதலால் சபை உபவாசத்தில் பெண்களும் கலந்து கொண்டார்கள் என்பது உறுதி. சபைகளில் உபவாசம், ஜெபம் காணப்பட்டது அப். 14:23. அப்படியானால் ஜெபம், உபவாசத்தில் பெண்களும் ஆண்களுடன் பங்கு கொண்டார்கள் என்பது புலனாகும். ஆதலால் சபையில் உபவாச ஜெபம் முழு இரவு ஜெபங்களில் பெண்கள் கலந்து கொள்ளக் கூடாது என்பது தவறு. புருஷர்களோடே மனைவிகளும் நித்திய ஜீவனாகிய கிருபையை சுதந்தரித்துக் கொள்கிறவர்களாதலால் அவர்களும் கனத்திற்குரியவர்கள். 1 பேது 3:7. இந்த சபையில் ஒரு சிறுபெண் அல்லது சிறுபையன் அல்லது நாம் அதிகமாக நேசிக்கும் யாராகிலும் இருந்து அவருடைய உயிர் பிரிந்து போனது என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது முழு சபையும் ஒன்று கூடி ஜெபம் பண்ணி, உபவாசித்து ஆண்டவரே அந்த பிள்ளையின் மேல் இரக்கமாயிரும் என விண்ணப்பிக்கும். பாருங்கள் தேவன் அந்த பிள்ளை உயிரோடு எழுப்ப கூடும் (கே.ப. 373.) முழுசபை என்றாலே அங்கு ஆண்களும் பெண்களும் உண்டு.

137. இயேசு கூட எந்த ஒரு பெண்ணையும் ஊழியத்துக்காக அழைக்காவிட்டாலும் அநேக பெண்கள் அவருடைய ஊழியத்தின் பாதையில் அவருக்கு தங்கள் ஆஸ்திகளினால் உதவி வந்தார்கள் லூக். 8:3.

138. இயேசு தான் உயிர்தெழுந்தவுடன் தம்மை முதன்முதலாக ஒரு பெண்ணுக்கே அதாவது மகதலேனா மரியாளுக்கே தன்னை வெளிப்படுத்தினார். யோ. 20:11 –18. அவருக்கு அன்பாய் இருந்த சீஷனுக்கு கூட அந்த சிலாக்கியம் கிடைக்கவில்லை.

139. புதிய ஏற்பாடு முழுவதையும் கிரேக்க பாஷையில் இருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் மான்ட்கோமெரி என்ற பெண் ஆகும். பெண்கள் இந்த அம்மையாரைப் போன்று ஊழியத்தின் பாதையில் ஒத்தாசையாக இருக்கலாம்.

140.. ஒருவரை ஒருவர் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள் என 1கொரி.16:20ல் வாசிக்கிறோம். இதைக்கொண்டு ஆண்களும், பெண்களும் ஒருவரை ஒருவர் தழுவி உதட்டிலோ, முகத்திலே முத்தமிடக் கூடாது. அது சீர்குலைச்சலை உண்டாக்கும். மனித குலத்தை சேர்ந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறு சுரப்பிகள் உண்டு. பெண்களுக்கு பெண் இனச்சுரப்பி, ஆண்களுக்கு ஆண் இனச்சுரப்பி. இந்த சுரப்பிகள் உதடுகளில் அமைந்துள்ளன. ஒரு ஆண் மற்றொரு ஆணை உதட்டோடு உதடு முத்தம் செய்வது ஓரினப்புணர்ச்சியை தோற்றுவிக்கிறது. அவ்வாறாகவே பெண்கள் மத்தியிலும். மேலும் ஒரு ஆண் ஒரு பெண்ணை அவ்வாறு முத்தமிட்டால் அது விபச்சாரம். அந்நாட்களில் ஒருவரை ஒருவர் தழுவி கழுத்தின் பின்புறத்தில் முத்தமிட்டர்கள். அது ஒரு வாழ்த்துதல். இந்நாட்களில் ஒருவருக்கொருவர் கை ஒருவர் குலுக்குகிறார்கள். இன்றைக்கு ஒரு ஆண் ஒரு பெண்ணுக்கு வாழ்த்துதல் கூறவிரும்பினால் அந்நியோந்நிய ஐக்கியத்திற்கு அடையாளமாக வலது கை கொடுத்து வாழத்துதல் தெரிவிக்கலாம். (கலா. 2:9. கே.ப. 156)

141. ஸ்திரீகளுக்கடுத்த காரியங்கள் என்ன?

1) ஸ்திரீ புருஷனிலிருந்து தோன்றினாள். 1கொரி.11:8.

2) ஸ்திரீ புருஷனுக்காக சிருஷ்டிக்கப்பட்டவள். 1கொரி.11:9

3) ஸ்திரீ புருஷனுடைய மகிமையாய் இருக்கிறாள். 1கொரி.11:7

4) திருமணம் செய்யாமல் ஒரு ஆண் பெண் கூடி வாழக் கூடாது.

5) பெண்கள் தங்களுடன் விசுவாசத்தில் இல்லாத ஒருவனை திருமணம் செய்யக்கூடாது. 2கொ.6:15

6) உங்களுடைய துணையை உங்கள் இனம், குலம், கோத்திரத்தில் இருந்து தெரிந்து எடுத்துக்கொள்ளுங்கள். இதில் கலப்படம் செய்யாதிருங்கள்.

7) பெண்கள் தங்கள் இசைவு அல்லாத திருமணத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது. ஆதி. 24:58.

8) உங்கள் திருமண வாழ்க்கை கிறிஸ்துவுக்கும் அவருடைய சரீரமாகிய சபைக்கும் உள்ள ஐக்கியத்தை பிரதிபலிக்கிறதாக இருக்க வேண்டும். எபே. 5:22–33.

9) திருமணத்தில் செய்யும் உடன்படிக்கைக்கு அடையாளமாக தாலி, மோதிரம் அல்லது சமுதாயத்தில் நிலவும் அடையாள சின்னம் ஒன்றை அணிந்து கொள்ள வேண்டும்.

10. உபவாசத்திற்கும், ஜெபத்திற்கும் தடையிராதபடி சில காலம் மனைவி புருஷனை விட்டு பிரிந்திருக்கலாம். மற்றபடி கணவனை விட்டு பிரிந்திருக்கக் கூடாது. 1கொரி.7:5.

11. நீங்கள் உங்கள் கணவனுக்கு ஒரு துணை, ஆனால் அடிமையல்ல.

12. எக்காரணத்தைக் கொண்டும் விவாகரத்து செய்யாதிருங்கள். ஏனென்றால் விவாகரத்து விவாகத்தை கலைப்பது இல்லை.

13. பெண்கள் கற்புள்ளவர்களாக இருக்க வேண்டும். தீத்.2:5

14. ஸ்திரீ தன் புருஷனுக்கு விரோதமாக விபச்சாரம் செய்ய கூடாது.
யாத்.20:14, ரோ.7:2&3 1கொரி 7:3&4.

15. ஸ்திரீ தன் சொந்த புருஷனால் பிள்ளைகளை பெற்று, பின் சந்ததியை உருவாக்க வேண்டும் உபா. 25:5&6

16. தன் பிள்ளைகளை கர்த்தருக்கு ஏற்ற போதனைகளிலும் சிட்சைகளிலும் வளர்க்க வேண்டும். எபே.4:6, 2தீமோ.1:5.

17. ஸ்திரீ தன் பிள்ளைகளால் பாக்கியவதி என்று புகழப்படும் புகழ்ச்சிக்கு பாத்திரவாளியாக இருக்க வேண்டும். நீதி 31:28.

18. புத்தியுள்ள மனைவி அவள் புருஷனுக்கு கர்த்தர் கொடுக்கும் ஈவு. நீதி. 19:14.

19. குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்கு கிரீடமாய் இருக்கிறாள் நீதி.12:4.

20. குணசாலியான ஸ்திரீயின் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது. நீதி.31:10.

21. ஸ்திரீ தன் புருஷனுடைய முழுநம்பிக்கையாய் இருக்க வேண்டும். நீதி. 31:11.

22. மனைவி தன் புருஷனுக்கு செய்யவேண்டிய கடமைகள் அனைத்தையும் தவறாது செய்யவேண்டும். 1 கொரி.7:4.

23. மனைவி தன் சுயசரீரத்துக்கு ஆதிகாரி அல்ல, புருஷனே அதற்கு அதிகாரி 1கொரி 7:3.

24. ஸ்திரீ புருஷனுடைய கண்களுக்கு விருப்பமானவளாக இருக்க வேண்டும். ஏசே.24:16

25. ஸ்திரீ புருஷனுக்கு பிரியமானவளாக இருக்க வேண்டும் ஆதி.29:23.

26. மனைவி தன் புருஷனிடத்தில் பயபக்தியுடயவளாய் இருக்க வேண்டும் எபே. 5.33.

27. மனைவியின் ஆசை எப்போழுதும் தன் புருஷனை பற்றி இருக்க வேண்டும். ஆதி.3:16

28. மனைவி தன்னுடைய கணவனுடைய அதிகாரத்திற்குட்பட்டவள். அதிகாரம் என்பது அடக்கி ஆளுகை செய்ய அல்ல.

29. மனைவி தன் சொந்த புருஷனுக்கு எந்தக்காரியத்திலேயும் கீழ்படிந்து இருக்க வேண்டும். எபே.5:2&4. தீத்.2:5, 1பேது.3:1

30. பெண்கள் ஒரு காரியத்தை கற்றுக்கெள்ள விரும்பினால் வீட்டிலே தன் புருஷன் இடத்தில் விசாரிக்க வேண்டும். 1கொரி.14:35. தன்புருஷனிடத்தில் தெரிந்து கொள்ளமுடியாத காரியங்களை தன்புருஷனோடு ஊழியக்காரனிடம் சென்று கற்றுக்ளொள்லாம்.

31. பெண்கள் தங்கள் சொந்த புருஷருக்கு கீழ்படியாது சபை போதகனுக்கு கீழ்படிந்து நடப்பது தேவசித்ததுக்கு புறம்பான நடக்கையாகும்.

32. புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள் நீதி.14:1.

33. பெண்கள் சாராளைப் போன்று தன் கூடாரத்துக்குள் இருந்து கொண்டு தன் வீட்டுகாரியங்களை நிர்வகிக்க வேண்டும் 1தீமோ.5:14, நீதி.31:15&27.

34. பெண்கள் வீட்டில் தரித்திருக்கிறவர்களாய் இருக்கவேண்டும் தீத்.2:5

35. பெண்கள் பயபக்தியோடு கூடிய தங்கள் கற்புள்ள நடத்தையினால் திருவசனத்திற்கு கீழ்படியாத தன் புருஷனை ஆதாயப்படுத்திக் கொள்ள வேண்டும். 1 பேது.3:1:2.

36. போதிக்க, பிரசங்கிக்க, ஆண்கள் மீது அதிகாரம் செலுத்தும் எந்த காரியத்திலும் பெண்கள் ஈடுபடக்கூடாது.

37. மனைவி தன் புருஷனுடைய புகழ்சிக்குரியவளாக இருக்க வேண்டும். நீதி. 31:29.

38. ஸ்திரீ நற்கிரியைகளையும் தானதர்மங்களையும் செய்கிறவளாய் இருக்க வேண்டும். அப் 9:36.

39. ஸ்திரீகள் விதவைகளுக்கு உதவி செய்ய வேண்டும் அப். 9வது அதி.

40. ஸ்திரீகள் உபத்திரவப்படுகிறவர்களுக்கு உதவி செய்யவேண்டும் 1.தீமோ. 5:10.

41. ஸ்திரீகள் அந்நியர்களை உபசரிக்க வேண்டும் 1தீமோ 5:10.

42. ஸ்திரீகள் சிறுமையானவர்களுக்கு பெண்கள் தங்கள் கைகளைத் திறக்க வேண்டும் நீதி. 31:20.

43. ஸ்திரீகள் ஏழைகளுக்கு தன் கரங்களை நீண்ட வேண்டும். நீதி.31:20

44. கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீ புகழப்படுவாள் நீதி.31:30

45. கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீகளின் செய்கைகள் வாசல்களில் அவளைப் புகழும் நீதி 31:31.

46. பெண்கள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்க வேண்டும்.

47. தன் வாயை ஞானம் விளங்க திறக்கவேண்டும். தயையுள்ள போதகம் அவள் நாவின் மேல் இருக்க வேண்டும் நீதி. 31:26. அதாவது அவளுடைய ஞானம், அவளுடைய அபிப்பிராயங்கள் அறியப்பட்டு மதிக்கப்படத்தக்கவளாய் இருக்க வேண்டும்.

48. ஸ்திரீகள் தேவனுடைய ஊழியக்காரர்களை உபசரிக்க வேண்டும். அப். 16:14,15.

49. ஸ்திரீகன் தேவனுடைய சபைக்கடுத்த பணிகளை பெபேயாளைப் போன்று செய்யலாம். 1 கொரி. 16:1.

50. ஸ்திரீகள் தேவனுடைய சபையில் பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவலாம்.

1 தீமோ 5:10.

51. பெண்கள் எல்லாவற்றிலும் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருக்க வேண்டும். தீத். 2:5

52. பெண்கள் தங்கள் தலைமயிரை பின்னக்கூடாது. 1 பேது. 3:3.

53. பெண்கள் தங்கள் தலைமயிரை கத்தரிக்கக்கூடாது, சிரைக்கக்கூடாது. 1 கொரி.11:6.

54. பெண்கள் தங்கள் தலைமயிரில் குதிரைவால் கொண்டை போட்டு அலங்கரிக்கக்கூடாது.

55. பெண்கள் தங்கள் தலையில் பூ வைத்து, தங்களை அலங்கரிக்கக்கூடாது.

56. பெண்கள் தங்களை பொன் ஆபரணங்களினால் அலங்கரிக்கக்கூடாது. 1 பேது.3:3.

57. பெண்கள் விலைஉயர்ந்த வஸ்திரங்களை உடுத்தி தங்களை அலங்கரிக்கக்கூடாது. 1 பேது. 3:3.

58. பெண்கள் மிக மெல்லிய, இறுக்கமான, குட்டையான ஆடைகளை அணியக்கூடாது.

59. பெண்கள் மதுபானத்திற்கு தங்களை அடிமையாக்க கூடாது. தீத்.2:3.

60. பெண்கள் முகத்தில் சாயம் பூசக்கூடாது.

61. பெண்கள் கண்களில் மையிடக்கூடாது.

62. பெண்கள் உயர்ந்த பாதம் கொண்ட செருப்புக்களை அணியக்கூடாது.

63. பெண்கள் ஆண்களின் ஆடைகளை அணியக்கூடாது. உபா. 22:5.

64. பெண்கள் சண்டைக்காரியான மனைவியாக இருக்கக்கூடாது. நீதி. 21:9.

65. பெண்கள் விசுவாசத்தில் கானானிய ஸ்திரீயைப் போன்று காணப்படவேண்டும். மத். 15:22.

66. பெண்கள் மரியாளைப் போன்று ஸ்திரீகளுக்குள்ளே, ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும். லூக்.1:42.

67. தேவையானது ஒன்றே, மார்த்தாளுடைய சகோதரியாகிய மரியாள் தன்னைவிட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டது போல பெண்களும் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, அதை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, அதன்படி நடந்து கனி கொடுக்கிறவர்களாய் இருக்க வேண்டும். லூக். 10:39&49.

68. பெண்கள் தங்கள் கணவனுக்கு அல்லது ஊழியக்காரர்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் ஒத்தாசையாக இருக்க வேண்டும். உதா. பிரிஸ்கில்லாள். அப். 18:24–28.

69. ரெபெக்காளிடம் எலியேசர் கண்ட பண்பும், குணாதிசயங்களும் பெண்களிடத்தில் காணப்படவேண்டும். ஆதி. 24:17–20. ஏனென்றால் ஈசாக்கு கிறிஸ்துவுக்கும் ரெபெக்காள் மணவாட்டி சபைக்கும் அடையாளமாயிருக்கிறார்கள்.

70. பெண்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளக்கூடாது.

71. பெண்கள் கருச்சிதைவு செய்து கொள்ளக்கூடாது.

72. பெண்கள் பலவீன பாண்டம் 1 பேது. 3:7.

73. பெண்கள் நித்திய ஜீவனாகிய கிருபையை சுதந்தரித்துக் கொள்ள புருஷர்களுடன் சுதந்தரவாளிகள் 1 பேது. 3:7

74. ஒரு ஸ்திரீ தன் புருஷன் உயிரோடு இருக்குமளவும் அவனுடைய நிபந்தனைக்கு உட்பட்டு இருக்கிறாள். புருஷன் மரித்த பிறகு புருஷனைப்பற்றிய பிரமாணத்தில் இருந்து விடுதலையாகிறாள். ரோ. 7:2

75. புருஷன் மரித்த பின்பு தனக்கு இஷ்டமானவனும் கர்த்தருக்கு உட்பட்டவனுமாய் இருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள். 1 கொரி. 7:39.

76. ஆனால் விவாகமின்றி அப்படியே தேவனுக்கென்று இருந்து விட்டால் பாக்கியவதியாயிருப்பாள். 1கொரி.7:40.

142. பிரசங்கி: ஸ்திரீயானவளை சாவிலும் அதிக கசப்புள்ளவளென்று கண்டேன் என்கிறான். பிர. 7:26. அதோடுமட்டுமல்ல, ஆயிரம் பேருக்குள்ளே ஒரு நீதிமானைக்கண்டேன், ஆனாலும் ஆயிரம் ஸ்திரீகளுக்குள் ஒரு நீதியுள்ள ஸ்திரீயை காணவில்லை என்கிறான். பிர. 7:29.

143. பெண்களுக்குக்கடுத்த இத்தனைக் காரியங்களைக்குறித்து நீங்கள், உங்கள் கணவன், உங்கள் மேய்ப்பன் என்னோடு இணங்கலாம், இணங்காமலும் இருக்கலாம். அது பற்றி எனக்கு ஒன்றும் கவலை இல்லை. இணங்காவிட்டால் மீண்டும் ஒரு முறை ஜெப சிந்தனையுடன் வேத வசனத்தையும், இக்காலத்திற்குரிய செய்தியையும் ஆராய்ந்து பாருங்கள். பெண்களுக்கு அடுத்த காரியங்களை குறித்து தேவனுடைய வார்த்தை, இக்காலத்திற்குரிய செய்தி என்ன கூறுகிறது என்பது தான் முக்கியம். அதுவே உங்களுக்கும் முக்கியமாக இருக்க வேண்டும். ஒரு மேய்ப்பன் தேவனுடைய வார்த்தைக்கும் இக்காலத்திற்குரிய செய்திக்கும் விரோதமாக போதித்தால் அவன் கழுகுகளை போஷிக்கிறவன் அல்ல, மாறாக அவன் கோழிக்குஞ்சுகளை போஷிக்கிறவனாக இருப்பான். இதைப் புரிந்து கொண்டீர்களா?.

144. பெண்களுக்கடுத்த இத்தனை காரியங்களைக் குறித்து நீங்கள் இவைகள் யாவும் சிறு சிறு காரியங்கள் தானே இதை ஏன் நீங்கள் பெரிதுபடுத்தி, முக்கியத்துவப்படுத்தி எழுதுகிறீர்கள் என என்னைக் கேட்கலாம். இவைகளில் தவறினால், அது ஒரு பெண்ணின் இரட்சிப்பை பாதிக்குமா என்று கூட நீங்கள் கேட்கலாம்.

ஆனால் பிரியமானவர்களே இந்த சிறுசிறு காரியங்களை உங்கள் வழியில் நின்று அகற்றி விட்டு வாருங்கள், பின் நாம் இதைவிட பெரியபெரிய காரியங்களைக் குறித்துப் பேசுவோம், தியானிப்போம். ஆதலால் நீங்கள் பால்குடியை முதலில் நிறுத்துங்கள். பின் பலமான ஆகாரத்தை நான் உங்களுக்கு தருகிறேன். பால் குடியை மறக்காத நீங்கள் பலமான ஆகாரத்தை எப்படி புசிக்க முடியும்?. பின் எப்படி தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும்.?

**145.** மேலும் இந்நாட்களில், இக்காலத்திற்குரிய செய்தியின்மேல் அநேக பாஸ்டர்கள் தேவபத்தியின் வேஷத்தைத் தரித்துக்கொண்டு பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளில் இழுப்புண்டு தங்கள் வீட்டுக்கு முன் அறையில் பாய்விரித்து, கொட்டு அடித்து, பாட்டுப்பாடி, வியாதியிலிருந்து விடுதலை, கடன் பிரச்சணையில் இருந்து விடுதலை, பில்லிசூனியத்தில் இருந்து விடுதலை எனக்கூறி எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் நுழைந்து அவர்களை வசப்படுத்திக்கொண்டு தங்கள் காரியங்களை சமாளித்து வருகிறார்கள். சபை பெண்களால் நிறைந்திருக்கிறது. இப்படிபட்ட பாஸ்டர்களை அடையாளம் கண்டு கொண்டு அவர்களை குறித்து எச்சரிக்கையாக இருங்கள். இவர்கள் உங்களை சத்தியத்துக்குள் வழிநடத்து முடியாது. இவர்கள் தங்கள் பிழைப்புகளுக்காக ஜெப வீடு என்ற பெயரில் ஒரு குட்டி மருத்துவமனை ஆரம்பித்து அதில் ஜெபம், உபவாசம், மற்றும் மருந்து மாத்திரைகள் முதலியவைகளைக் கொண்டு உங்களுக்கு சிறிது விடுதலைக் கொடுத்து, அதினால் நீங்கள் கொடுக்கும் காணிக்கை, தசமபாகம் முதலியவற்றைக் கொண்டு தங்கள் குடும்பத்தை நடத்தி, உங்களை இப்பிரபஞ்சத்திற்குரிய நன்மைகளுக்காக மாத்திரமே கிறிஸ்துவண்டை வழி நடத்துகிறவர்களாயிருக்கிறார்கள்.

**146.** விசுவாசம் பெரிய பெரிய காரியங்களை நடப்பிக்கும். ஆனால் அவைகள் யாவும் ஆவிக்குரியவைகளாக இருக்காது என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இது கொடிதான வஞ்சிப்பின் காலமாக இருப்பதால் எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதை பற்றிக் கொண்டு, உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்போது குற்றமற்றதாய் இருக்கும்படி காத்துக்கொள்ளுங்கள். இவைகளை எழுத என் உள்ளத்தில் ஒரு ஆர்வத்தைக் கொடுத்தவர்: மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன் என்கிறார்.

**147.** சர்வ வல்லவர் உங்களை உயர வானத்திலிருந்து ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினாலும், பூமியின் ஆசீர்வதங்களினாலும், உங்கள் கர்பங்களுக்கும் ஸ்தனங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதிப்பாராக ஆமென். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான என்னுடைய அன்பு உங்கள் எல்லோரோடுங்கூட இருப்பதாக. ஆமென்.

ஆகஸ்ட் 2001

கிறிஸ்துவின் அன்பில்

**சகோ. காலேப் யோசுவா**